**பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம்**

**திருவள்ளுவராண்டு 2057, மாசி திங்கள் 6 – ஆம் நாள்,**
**2026-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18-ஆம் நாள்**
**புதன்கிழமை காலை 11.00 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில் உள்ள மன்றக் கூடத்தில் 2026-2027 ஆம் ஆண்டின் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தல் குறித்து நடைபெற்ற மன்ற கூட்ட நிகழ்ச்சிகள்**

**மாண்புமிகு மேயர்**

தமிழ்த்தாய் வாழ்த்து.

**(அவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது)**

அனைவருக்கும் வணக்கம்.

திருக்குறள். 39 இறைமாட்சி என்ற அதிகாரம். குறள் எண். 385.

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு".

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்க கருவூலத்திற்கான வருவாயை பெருக்கி, அதை பாதுகாத்து திட்டமிட்டு செலவிடுவது தான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18-ஆம் நாள் புதன்கிழமை பெருநகர சென்னை மாநகராட்சியின் 2026-2027 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தல் குறித்த கூட்ட நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

**(தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை மாண்புமிகு மேயர் அவர்கள் படிக்க மன்ற உறுப்பினர்கள் அனைவரும் திரும்ப சொல்லுதல்)**

**தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாக கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற, சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழு பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதை செய்வோம், சொல்லாததையும் செய்வோம் என்பதை மனதில் வைத்து ஏழை, எளிய, நடுத்தர குடும்பங்களில் பெண்களின் பொருளாதாரம் முன்னேற்றம் காணும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்ற மகத்தான திட்டத்தினை அறிவித்து பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- அவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டு பயன்படுத்தி வந்த நிலையில், சிலர் சட்டமன்ற தேர்தலையொட்டி இந்த திட்டத்தை முடக்க நினைக்கிறார்கள் என்ற செய்தியை அறிந்தவுடன், 13.02.2026 வெள்ளிக்கிழமையன்று காலைப் பொழுதில் பெண்களுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் வகையில், 1.31 கோடி மகளிரின்

வங்கிக் கணக்கிற்கு, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கென கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, ரூ.3000/-த்தோடு, கோடைக்காலச் சிறப்பு தொகுப்பாக ரூ.2000/-மும் சேர்த்து உரிமைத் தொகை பெறும் பெண்களின் வங்கிக் கணக்கிற்கு ரூ.5000/-ம் வரவு வைக்கப்பட்டு, **(கைதட்டல். ..)** பெண்கள் ஆனந்தம் அடையும் வகையில் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் மனமொத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், பெண்கள் மனம் குளிரும் வகையில், அடுத்து அமையும் 2.0 திராவிட மாடல் ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ரூ.1000/-த்திலிருந்து ரூ.2000/-மாக உயர்த்தப்படும் என்ற மகத்தான அறிவிப்பையும் மாண்புமிகு தளபதி அவர்கள் அறிவித்துள்ளார்கள் **(கைதட்டல்..)** என்பதையும் மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு கடந்த 5 ஆண்டுகளில் எடுத்த பல்வேறு முயற்சியின் காரணமாக, தொழில் துறையில் இந்தியாவில் முன்னணி மாநிலமாக உள்ளது. இது திராவிட மாடல் அரசுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். தமிழ்நாடு தான் இந்தியாவிற்கே மாடலாக விளங்குகிறது.

தந்தைப் பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், பெண்கள் கல்வி அறிவில் முன்னேற்றம் பெற்றால் தான் சமுதாயம் முன்னேறும் என்று பாடுபட்டு வந்தார்கள். இம்மாபெரும் தலைவர்களின் குறிக்கோள்களை செயல்படுத்தும் வகையில், "புதுமைப் பெண்" திட்டம் என்ற மகத்தான திட்டத்தை கொண்டுவந்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- என்று 6 லட்சத்து 95 ஆயிரத்து 296 மாணவிகள் பயன் அடையும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல், 6 லட்சத்து 23 ஆயிரத்து 529 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 1 லட்சத்து 41 ஆயிரத்து 718 கோடி ரூபாய் வங்கிக்

கடனுதவியாக பெற்று பயன்பெறும் வகையில் வழிவகை செய்துள்ளது திராவிட மாடல் அரசு என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், பள்ளிப்படிப்பையும், கல்லூரி படிப்பையும் நிறைவு செய்த மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில், “நான் முதல்வன்” திட்டம் மூலம் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு 48 லட்சத்து 65 ஆயிரத்து 50 பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான கழக அரசு “நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 17 லட்சத்து 82 ஆயிரத்து 687 பயனாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சமூகநீதி, சமத்துவம், சமதர்மம் மேலோங்கி சாதிய ஏற்றத் தாழ்வுகள், ஆண், பெண் பாகுபாடு இல்லாமல் வாழ வேண்டும் என்று தனது இறுதிகாலம் வரை வாழ்ந்து மறைந்து, இன்று வரை சமுதாயத்தில் உயிரோட்டத்துடன் இருக்கும் தந்தைப் பெரியார் அவர்களின் சிந்தனைகளை அயல்மொழியில் வெளியாகும் முயற்சியில் ஆங்கிலம், பிரெஞ்சு, அரபு, குஜராத் முதலிய 21 மொழிகளில் பெரியாரின் பல்வேறு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளது. இந்த முயற்சிகள் மூலம் தந்தை பெரியார் கண்ட கனவு இந்தியா முழுவதும் எதிரொலிக்கும் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. அதேபோல், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் படைப்புகளை எளிய தமிழ் மொழியில் மொழிப் பெயர்த்து 27 தொகுதிகளில் வெளியிடப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர்களின் திறமையை கண்டறிந்து அதனை ஊக்குவித்து அனைத்து வகையிலும் ஆதரவளித்து வருவதன் வாயிலாக தமிழ்நாடு இந்தியாவிலேயே விளையாட்டு தலைநகரமாக விரைவில் மாற உள்ளது. இந்த நேரத்தில் அனைவருக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு வகையில் முன்னேற்றம் காணும் வகையில் வழிவகை செய்து, சென்னை நகரம் முழுவதும் மழைநீர் வடிகால்வாய்கள், சாலைகள், உயர் கோபுர மின்விளக்குகள், திருமண மண்டபங்கள், சமுதாய கூடங்கள், பள்ளி கட்டிடங்கள், பூங்காக்கள், நடைபாதைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற வழிவகை செய்த திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். **(கைதட்டல். ..)**

## 2026-2027 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள்

### கல்வி

1. **பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மேல்நிலை, உயர்நிலை மற்றும் மையப்பள்ளி என 100 சென்னை பள்ளிகளுக்கு உயர்தர தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பன்முக செயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரம் (MULTI FUNCTIONAL PRINTER) ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள், 15 மையப்பள்ளிகள் மற்றும் உயர்கல்விக்கான சிறப்பு பயிற்சி அளிக்கும் 4 வட்டார பள்ளிகள் என மொத்தம் 100 பள்ளிகளுக்கு, உயர்தர தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பன்முக செயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரம் **(MULTI FUNCTIONAL PRINTER)** ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப துறையின் மூலம் கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. **பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 100 மாணவர்களுக்கு மேல் பயிலும் 180 பள்ளிகளில் தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகம் / பள்ளி மேலாண்மை குழு (PTA / SMC) மூலம் 10 மாதங்களுக்கு ரூ.3.65 கோடி மதிப்பீட்டில் பணியமர்த்தப்படுவார்கள்.**

**அறிவிப்பு:** 2025-2026ஆம் கல்வியாண்டில் முதற்கட்டமாக 141 உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் மற்றும் விளையாட்டு திறனை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக 2026-2027ஆம் கல்வியாண்டில் தொடக்கப்பள்ளிகளுக்கு 101 ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளிகளுக்கு 29 ஆசிரியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு 50 ஆசிரியர்கள் என மொத்தம் 180 தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள், ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை தொகுப்பூதிய அடிப்படையில் 10 மாதங்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம்/ பள்ளி மேலாண்மை குழு (PTA / SMC) மூலம் பணியமர்த்தப்படுவார்கள். இதற்காக ரூ.3.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. **பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 250 தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள், மதிய உணவு சமையற்கூடங்கள், ஆய்வகங்கள், அரங்கங்கள், கழிப்பறைகள், பள்ளி சுற்றுச்சுவர்கள் மற்றும் பள்ளி வளாகங்களுக்கு ஒரே மாதிரியான வண்ணக் குறியீடு (Color Coding) செய்ய ரூ.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கல்வித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் 114 தொடக்கப் பள்ளிகள், 79

நடுநிலைப்பள்ளிகள், 35 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 22 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 250 பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள், மதிய உணவு சமையற்கூடங்கள், ஆய்வகங்கள், அரங்கங்கள், கழிவறைகள், பள்ளி சுற்றுச்சுவர்கள் மற்றும் பள்ளி வளாகங்கள் ஒரே மாதிரியான வண்ணக் குறியீடு (Colour Coding) செய்து புதுப்பொலிவுடன் மேம்படுத்திட ரூ.20 கோடி மதிப்பீட்டில் வட்டார துணை ஆணையர்களின் மேற்பார்வையில் கட்டடத்துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. **பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு மாணவ-மாணவியர்களுக்கு உயர்கல்விக்கான ஒரு வருட சிறப்பு பயிற்சிக்கு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து சென்னை மேல்நிலைப் பள்ளிகளிலும் 12ஆம் வகுப்பில் பயிலும் 5,314 மாணவ-மாணவியர்களின், விருப்பம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் ஜூன் 2026 முதல் கல்வியாண்டு இறுதி வரை உயர்கல்விக்கான ஒரு வருட சிறப்பு பயிற்சிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மாணவ-மாணவியர்களின் எதிர்கால நலனுக்காக செய்து தரப்படும்.

5. **பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் மின் வசதிகள், மோட்டார் மற்றும் பம்பு போன்றவைகளில் ஏற்படும் பழுதுகளை சரிபார்ப்பதற்கும் மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணிகள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள 206 தொடக்கப்பள்ளி, 130 நடுநிலைப்பள்ளி, 46 உயர்நிலைப்பள்ளி மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகளில் பயிலும், மாணவ-மாணவியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி மின் வசதிகள், மோட்டார் மற்றும் பம்பு போன்றவைகளில் ஏற்படும் பழுதுகளை சரிபார்ப்பதற்கும், வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் ஆண்டுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் வட்டார துணை ஆணையர்களின் மேற்பார்வையில், மின்துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்.

6. **பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9ஆம் வகுப்பு மாணவ-மாணவியர்களுக்கு ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் யோகா மற்றும் தற்காப்புக்கலை பயிற்சி அளிக்கப்படும்**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பில் பயிலும் 33,865 மாணவ-மாணவியர்களின் உடல் நலத்தினை பேணும் வகையில் யோகா பயிற்சி அளிக்கப்படும். மேலும், 7, 8 மற்றும் 9ஆம் வகுப்பில் பயிலும் 25,526 மாணவ-மாணவியர்களுக்கு உடல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை மற்றும் துணிச்சலை வளர்க்கும் வகையில் தற்காப்புக்கலை பயிற்சி அளிக்கப்படும். யோகா பயிற்சி ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும், தற்காப்புக்கலை பயிற்சி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

7. **பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 206 தொடக்க மற்றும் 130 நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கான காலணி வைப்பு அறை ரூ.90 இலட்சம் மற்றும் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தேவையான**

**மேசைகள், நாற்காலிகள் கொள்முதல் செய்ய ரூ.2.60 கோடி நிதி ஒதுக்கீடு ஒதுக்கீடு செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 206 தொடக்க மற்றும் 130 நடுநிலைப்பள்ளிகளில் LKG முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள 2,563 வகுப்பறைகளின் வெளிப்புறத்தில் காலணி வைப்பு அறை ரூ.90 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 46 உயர்நிலை மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு வகுப்பறைக்கும் தலா ஒரு நாற்காலி, மேசை என்ற விகிதத்தில் 3,303 மேசைகள் மற்றும் 3,303 நாற்காலிகள் ரூ.2.60 கோடி மதிப்பீட்டிலும் கொள்முதல் செய்து உரிய பள்ளிகளுக்கு வழங்கப்படும். இதற்காக மொத்தம் ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. பெருநகர சென்னை மாநகராட்சிக்குக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் பழுதடைந்த 95 பள்ளிக் கட்டடங்களை சீரமைத்தல், சிதிலமடைந்த 9 கட்டடங்களை இடித்து விட்டு புதிய கட்டடங்களை கட்டுதல், 113 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் 14 பள்ளிகளில் சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற பணிகள் ரூ.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** மாணவ-மாணவியர்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அவர்கள் பயிலும் பள்ளிகளின் சூழ்நிலையை மேம்படுத்திடவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் பழுதடைந்த 95 பள்ளிக் கட்டிடங்களை மறுசீரமைக்கவும், மிகவும் சிதிலமடைந்த 9 பள்ளிக் கட்டிடங்களை இடித்து விட்டு புதிய கட்டிடங்கள் கட்டவும், சென்னை பள்ளிகளுக்கு தேவையான 113 கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் மற்றும் 14 பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற பணிகள் ரூ.40 கோடி மதிப்பீட்டில் கட்டிடத்துறை மூலம் மேற்கொள்ளப்படும்.

இந்தப் பணி மேற்கொள்வதன் மூலம் அனைத்து சென்னை பள்ளிகளிலும் மாணவ-மாணவியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**9. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 24,118 மாணவ-மாணவியர்களுக்கு தமிழ்-ஆங்கில அகராதி (Dictionary) ரூ.37 இலட்சம் செலவில் வழங்குதல்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்கள் தமிழ், ஆங்கிலத்தில் இலக்கணப் பிழை இல்லாமல் எழுதுவதற்கும் மாணவர்களிடையே உரையாடலை எளிமையாக்குவதற்கும், அதிக அளவில் தமிழ், ஆங்கில சொற்களை கற்றுக்கொள்ளவதற்கும், மேலும், அவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் நோக்கிலும், 8ஆம் வகுப்பில் பயிலும் 8,892 மாணவ-மாணவியர்கள், 9-ஆம் வகுப்பில் பயிலும் 7,934 மாணவ-மாணவியர்கள் மற்றும் 10-ஆம் வகுப்பில் பயிலும் 7,292 மாணவ-மாணவியர்கள் என மொத்தம் 24,118 மாணவ-மாணவியர்களுக்கு தமிழ்–ஆங்கில அகராதி (Dictionary) ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து மாணவ-மாணவியர்களுக்கு வழங்கப்படும்.

**10. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், உயிரியல், வேதியியல், இயற்பியல், பொறியியல் மற்றும் கணினி அறிவியல் போன்ற பாடங்களில் அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திட ஒரு புதிய நவீன அறிவியல் மையம் (Modern Science Centre) உருவாக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களிடையே, வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மாணவ-மாணவியர்களின் அறிவியல் ஆர்வத்தை தூண்டி, அவர்களை இளம் விஞ்ஞானிகளாக உருவாக்க வழிகாட்டும் வகையில் உயிரியல், வேதியியல், இயற்பியல், பொறியியல் மற்றும் கணினி அறிவியல் போன்ற பாடங்களில் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திடவும் தனியார் பள்ளிகளுக்கு நிகராக ஆய்வகங்கள் அமைத்திடவும், நவீன முறையில் ஒரு புதிய நவீன அறிவியல் மையம் (Modern Science Centre) பொது-தனியார் பங்களிப்புடன் நிறுவப்படும்.

11. **மாணவ-மாணவியர்களுக்கு உளவியல் ஆலோசனைகள் வழங்க 46 உயர்நிலை பள்ளிகளுக்கு தேவையான 17 உளவியல் ஆலோசகர்கள் தொகுப்பூதியம் அடிப்படையில் 10 மாதங்களுக்கு ரூ.59.50 இலட்சம் மதிப்பீட்டில் நியமனம் செய்யப்படுவார்கள்.**

**அறிவிப்பு:** 2025-2026 கல்வியாண்டில் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலை பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட 10 உளவியல் ஆலோசகர்கள் இன்றைய சூழலில் வளர் இளம் பருவ மாணவ-மாணவியர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு நல்ல முறையில் உளவியல் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். அதை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 2026-2027ஆம் கல்வியாண்டில் 46 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு தகுந்த உளவியல் ஆலோசனை வழங்கி படிப்பில் கவனம் செலுத்துவதற்கும் மாநகராட்சியில் உள்ள பள்ளிகள் அதிக தேர்ச்சி சதவீதம் பெறுவதற்கு ஏதுவாக 17 உளவியல் ஆலோசகர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் 10 மாதங்களுக்கு ரூ.59.50 இலட்சம் செலவினத்தில் நியமிக்கப்படுவார்கள். இந்த உளவியல் ஆலோசகர்களின்

நியமனங்கள் பாலின ஆய்வகத்தின் (Gender Lab) மேற்பார்வையின் மூலம் செயல்படுத்தப்படும்.

**12.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - 9ல் உள்ள தசைத்திறன் குறைபாடுள்ள (Muscular Dystrophy) சிறப்பு குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளியை போன்று இதர 14 மண்டலங்களிலும் பொது-தனியார் பங்களிப்பு (PPP) மற்றும் அரசு சாரா நிறுவனம் (Non Governmental Organization) மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - 9ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் (Muscular Dystrophy) பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியை போன்று இதர 14 மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு (Public-Private Partnership) மற்றும் அரசு சாரா நிறுவனம் (Non Governmental Organization) மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும்.

**13.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட விரிவாக்கம் செய்யப்பட்ட செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவர்களை பள்ளிக்கு அழைத்து வரவும், கல்விச் சுற்றுலா அழைத்துச்**

**செல்லவும் 11 பேருந்துகள் ரூ.4 கோடி மதிப்பீட்டில் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் 417 சென்னை பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் 1,13,398 மாணவ-மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தி கொடுத்திடும் பொருட்டு, மணலி, மாதவரம், சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு ஏற்கனவே 4 பேருந்துகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டம் பெற்றோர் மற்றும் மாணவ-மாணவியர்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ளதால், இத்திட்டத்தை மேலும் விரிவுப்படுத்தி மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து வரவும், கல்விச் சுற்றுலா அழைத்து செல்லவும் கூடுதலாக 11 பேருந்துகள் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ. 4 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

14. **பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளி செல்லாத மாணவ- மாணவியர்கள், இடை நின்ற மாணவ- மாணவியர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மாணவர்கள் ஆகியோர்களை கண்டறிந்து அவர்களுக்கான அடிப்படை கல்வியை கற்பிக்க 3 பள்ளிகளை தேர்ந்தெடுத்து அப்பள்ளியில் மாணவ-மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளை ஒதுக்கி இணைப்பு பாடப்பயிற்சி (Bridge Course) வழங்கல்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளி செல்லாத மாணவ-மாணவியர்கள், இடை நின்ற மாணவ-மாணவியர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மாணவ-மாணவியர்கள் ஆகியோர்களை கண்டறிந்து அனைவருக்கும் அடிப்படை கல்வியை

கற்பிக்கும் நோக்கத்தில் வட்டாரத்திற்கு ஒரு பள்ளி என 3 பள்ளிகளை தேர்ந்தெடுத்து, அப்பள்ளியில் மாணவ-மாணவியர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளை ஒதுக்கி இணைப்பு பாடப்பயிற்சியை (Bridge Course) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படும்.

**பொது சுகாதாரம்**

**15. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள 360 சுகாதார மையங்களில் கருப்பை வாய் புற்று நோய் உருவாக்கும் எச்.பி.வி. (HPV) வைரஸ் கண்டறிய பரிசோதனை மேற்கொள்ள எச்.பி.வி, டி.என்.ஏ (HPV DNA), RTPCR கிட் 50,000 எண்ணிக்கையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பரிசோதனை மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்றுநோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் **HPV DNA** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால், **HPV** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்தப் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்றுநோய் மருத்துவமனையிலுள்ள **RTPCR** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**16.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் மண்டலங்களில் உள்ள சுகாதார மையங்களில் பணிபுரியும் 720**

**செவிலியர்கள் மற்றும் காச நோய் களப்பணியாளர்களுக்கு Tablet ரூ.2.50 கோடி செலவில் கொள்முதல் செய்தல்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC), 19 மாநகர சமுதாய நல மையங்கள் (UCHC), 200 மாநகர நல வாழ்வு மையங்கள் (HWC) மற்றும் 1 தொற்றுநோய் மருத்துவமனை (CDH) ஆகியவை செயல்பட்டு வருகின்றன. களப்பணியின் போது மருத்துவ பதிவேடுகளை உடனுக்குடன் சேகரிப்பதற்கும், அதனை தலைமையிடத்திற்கு அனுப்புவதற்கும் கணினிமயமாக்கம் (Computerisation) செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக செவிலியர்கள், மருத்துவ பரிசோதனை செய்யும் போது பெறப்படும் தகவல்களான இரத்த அழுத்தம், நாடி துடிப்பு விகிதம், உயரம் மற்றும் எடை போன்ற தரவுகளின் குறிப்புகளை பகிர செய்ய தனியாக Tablet கீழ்கண்டுள்ள மையங்களுக்கு தேவைப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 360 மருத்துவமனைகளில் உள்ள 520 செவிலியர்கள் மற்றும் 200 காச நோய் களப்பணியாளர்கள் பயன்பாட்டிற்கு இணையதள வசதியுடன் கூடிய 720 Tablet ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**17.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள மக்களை தேடி மருத்துவ பிரிவில் பணியாற்றும் 600 களப்பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான மருத்துவம் சார்ந்த உடைமைகள் வைக்கும் பை (Medical Kit Bag) ரூ.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்..**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள மக்களை தேடி மருத்துவ திட்டம், பெண்

தன்னார்வ கள பணியாளர்களை கொண்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பெண் தன்னார்வலர்கள், பிசியோதெரபிஸ்ட் மற்றும் செவிலியர்கள் என 600 களப்பணியாளர்கள் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் களப்பணிக்கு தேவையான இரத்த அழுத்தமானி, இரத்த சர்க்கரை அளவிடும் கருவி, ஊசிகள், சுத்தமான பஞ்சு பெட்டி, பயன்படுத்தப்பட்ட பஞ்சு பெட்டி, அளவிடும் நாடா, கையுறைகள், டார்ச் லைட், மின்னணு எடை இயந்திரம், கோப்புகள் மற்றும் கோப்புறைகள் எடுத்து செல்ல ஒரே மாதிரியான மருத்துவம் சார்ந்த உடைமைகள் வைக்கும் பை (Medical Kit Bag) அளிப்பது அவசியமாகிறது. இதன் மூலம் இந்தக் கள பணியாளர்கள் களப்பணிக்கு தேவையான அனைத்து பொருட்களையும் ஒரே பையில் எடுத்து சென்று சிறப்பாக செயலாற்ற இயலும் என்பதால் 600 களப்பணியாளர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மருந்து உபகரணங்கள் வைக்கும் பை கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**18. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள சுகாதார மையங்களில் மின்னணு அறிவிப்பு பலகைகள் (Digital Boards) 60 சுகாதார மையங்களுக்கும் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள 360 சுகாதார மையங்களில் முதற்கட்டமாக பாலி கிளினிக் உள்ள 40 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 1 தொற்று நோய் மருத்துவமனைக்கு வரும் மருத்துவ பயனாளிகள் மற்றும் அவர்களுடன் வரும் உதவியாளர்களுக்கு (Attenders), மருத்துவமனை சேவைகள், அறிவிப்புகள் மற்றும் விழிப்புணர்வு காட்சிகள் காண்பிக்கப்பட வேண்டியுள்ளது. தற்போது இவைகள் அறிவிப்பு பலகைகள் மூலமாக காட்டப்பட்டு வருகிறது.

மின்னனு பலகைகள் வாயிலாக அறிவிப்புகளை மேலும் சிறப்புடன் செயல்படுத்த அனைத்து மையங்களிலும் மின்னனு அறிவிப்பு பலகைகள் நிறுவப்படுவதன் மூலம் அனைத்து பொது மக்களும் எளிதில் மருத்துவ சேவைகள் பற்றி காணொலி வாயிலாக அறிந்து கொள்ள இயலும் என்பதால், முதற்கட்டமாக 60 சுகாதார மையங்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மின்னனு அறிவிப்பு பலகை (Digital Boards) அமைக்கப்படும்.

**19. பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட 15 மருத்துவ மண்டலங்களில் உள்ள 15 சுகாதார மையங்களில் 7 நடமாடும் ஊடுகதிர் (X-Ray) இயந்திரத்தின் வழியாக எடுக்கப்படும் ஊடுகதிர்களை செயற்கை நுண்ணறிவு (AI) வழியாக ஆய்வறிக்கை வழங்க ஏதுவாக செயற்கை நுண்ணறிவு மென்பொருள் மற்றும் மென்பொருளை செயல்படுத்குவதற்கான உபகரணங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வரை உள்ள மருத்துவ மண்டலங்களில் 7 நடமாடும் ஊடுகதிர் (X-Ray) வசதியுள்ள காசநோய் பரிசோதனை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநகர காச நோய் மருத்துவமனைகளிலும், தொற்று நோய் மருத்துவமனை மற்றும் மாவட்ட காச நோய் மருத்துவமனையில் ஊடுகதிர் (X-Ray) சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் ஊடுகதிர் (X-Ray) இயந்திரத்தின் வழியாக எடுக்கப்படும் ஊடுகதிர்களை செயற்கை நுண்ணறிவு (AI) வழியாக தன்னிச்சையாக ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளித்திட செயற்கை நுண்ணறிவு (AI) மென்பொருள் மற்றும் மென்பொருளை செயல்படுத்துவதற்கான உபகரணங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**20.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த மாவட்ட காசநோய் மருத்துவமனைக்கு பதிலாக, புதிய கட்டிடம் கட்டும் பணிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** சென்னை மாவட்டத்தில் காசநோய் திட்டம் 1998-ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டு, இதற்காக மண்டலம்-6ல் புளியந்தோப்பு பகுதியில் காசநோய் மருத்துவமனை 2001 முதல் இயங்கி வருகிறது. இந்த காசநோய் மருத்துவமனையில் மாவட்ட திட்ட அலுவலகம், ஊடுகதிர் (X-Ray) வசதி மற்றும் பயிற்சி வசதிகள் உள்ளன. தற்போது, இந்தக் கட்டிடம் பழுதடைந்து ஒரு சில இடங்களில் சிதிலமடைந்து காணப்படுகிறது. இந்தப் பழுதடைந்த காச நோய் மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டுவது அவசியமாகிறது. எனவே, பழைய கட்டிடத்திற்கு பதிலாக புதிய கட்டிடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**21.பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும், தொற்று நோய் மருத்துவமனையில் புறநோயாளி பிரிவுக்காக புதிய கட்டிடம் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் புறநோயாளிகளுக்கு தேவையான அனைத்து மருத்துவ சேவைகள் சிறப்பாகவும், தரமானதாகவும், 30 வருடங்களுக்கு மேலான பழைய மருத்துவ கட்டிடத்தில் சிசிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டிடம் முற்றிலும் பழுதடைந்து காணப்படும் நிலையிலும், நாள் ஒன்றுக்கு 400 மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதாலும் போதுமான இடவசதி, ஆய்வக வசதி மற்றும் கழிப்பறை வசதி இல்லாத நிலையிலும் பழுதடைந்த இந்தப் பழைய

கட்டிடத்திற்கு பதிலாக புதிய கட்டிடம் கட்டும் பணிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**22.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள 360 சுகாதார மையங்களில் உள்ள கட்டிடங்களை சீரமைத்தல் மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஒரு வட்டாரத்திற்கு ரூ.5 கோடி வீதம் 3 வட்டாரங்களில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் சுகாதார மையங்கள் சீரமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகிய கட்டிடங்களை சீரமைத்து பழுதுபார்க்க ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ.5 கோடி வீதம் 3 வட்டாரத்திற்கு மொத்தம் ரூ.15 கோடி செலவில் சுகாதார மைய கட்டிடங்கள் சீரமைக்கப்படும்.

23. **மாபெரும் அளவிலான வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் திட்டத்தை அனைத்து தெரு நாய்களுக்கும் செயல்படுத்த ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.**

**அறிவிப்பு:** வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து பொதுமக்களை காத்திடவும், வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை மாநகரை உருவாக்கிடவும் (Rabies free Chennai) கடந்த ஆண்டு 09.08.2025 முதல் 31.12.2025 வரை அனைத்து மண்டலங்களிலும் உள்ள 1,47,538 தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் திட்டம் முதல் தவணையாக செயல்படுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து

இரண்டாவது தவணையாக 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் உள்ள அனைத்து தெரு நாய்களுக்கும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் சிறப்பு முகாம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

**24.பெருநகர சென்னை மாநகராட்சியின் வடக்கு வட்டாரத்தில் சுகாதாரமான புதிய இறைச்சி கூடம் நிறுவப்படும். மேலும், தெற்கு வட்டாரத்தில் புதிய இறைச்சி கூடம் நிறுவுவதற்கு விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது பெரம்பூர் (கோட்டம்-72) வில்லிவாக்கம் (கோட்டம்-95), கள்ளிக்குப்பம் (கோட்டம்-83) மற்றும் சைதாப்பேட்டை (கோட்டம்-168) ஆகிய இடங்களில் இறைச்சி கூடங்கள் இயங்கி வருகின்றன. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப இறைச்சி பயன்பாடு தேவையை கருத்தில் கொண்டு வடக்கு வட்டாரத்தில் ஒரு இறைச்சி கூடம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். மேலும், பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்க தெற்கு வட்டாரத்தில் இறைச்சி கூடம் அமைப்பதற்கான சாத்திய கூறுகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்படும்.

**25.பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரம் மற்றும் மக்கள் மக்கள் நலனை பாதுகாக்க நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பூச்சிகள் பூச்சிகள் மற்றும் கொசு தொல்லையை கட்டுப்படுத்த நீர்வழிப்பாதைகள், மழைநீர் வடிகால்வாய்கள் என கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து தரமான பூச்சி கொல்லி மருந்துகள் மற்றும் மேம்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி கொசுப்புழு அடர்த்தியை நிகழ்நேர கண்காணிப்பு (Real time Monitoring) செய்வதற்கு மூன்று**

**ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.25 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மக்களின் நலனை பாதுகாக்க நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பூச்சிகள் மற்றும் கொசு தொல்லையை கட்டுப்படுத்த சென்னையில் உள்ள நீர்வழிப்பாதைகள் (கூவம் ஆறு, அடையாறு ஆறு, பக்கிம்காம் கால்வாய் மற்றும் சிறிய கால்வாய்கள்) மற்றும் மழைநீர் வடிகால்வாய் கால்வாய்கள் என கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் தரமான பூச்சி கொல்லி மருந்துகள் மற்றும் மேம்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி கொசுப்புழு அடர்த்தியை நிகழ்நேர கண்காணிப்பை (Real time Monitoring) மூன்று ஆண்டுகள் மேற்கொண்டு பூச்சிகள் மற்றும் கொசு தொல்லைகளை கட்டுப்படுத்த ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மருத்துவ சேவைகள் துறை**

**26.பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் 19 மகப்பேறு மருத்துவமனைகள், ஒரு தொற்று நோய் மருத்துவமனை உட்பட மொத்தம் 20 மருத்துவமனைகளுக்கு ரூ.29 இலட்சம் செலவில் Multipara Monitor Type III (With Digital Spo2), 40 எண்ணிக்கையிலான கருவிகள் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ்வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சை பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணிக்க Multipara Monitor Type III (With Digital Spo2) கருவிகளை பயன்படுத்தி, அவசர

காலங்களில் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 16 நகர்ப்புற சமுதாய நலமையங்கள் (UCHC) மற்றும் மூன்று 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனை (EOC) மற்றும் ஒரு தொற்றுநோய் மருத்துவமனை உட்பட 20 மருத்துவமனைகளுக்கும் தலா இரண்டு வீதம் 40 எண்ணிக்கையிலான கருவிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் மூலமாக ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

**27.பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் 19 மகப்பேறு மருத்துவமனைகளுக்கு Fetal Pulse Oximeter - High End with detachable hand held front panel என்ற 19 கருவிகள் ரூ.23 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ் வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சை பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிஜன் அளவையும், இதய துடிப்பையும் (Pulse Rate,Blood Pressure,Heart Rate, SPO2) அளவிட பயன்படும் Fetal Pulse Oximeter கருவியின் மூலம் நுரையீரல் நோய்கள், இதய நோய்கள் மற்றும் ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ள குழந்தைகளின் உடல் நிலையினை தொடர்ந்து கண்காணிக்கவும் Fetal Pulse Oximeter கருவிகள் அவசியமாக உள்ளதால், 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் (UCHC) மற்றும் மூன்று 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனைகள் (EOC) ஆக மொத்தம் 19 மருத்துவமனைகளுக்கும் தலா ஒரு கருவி வீதம் 19 எண்ணிக்கையில் Fetal Pulse Oximeter - High End with detachable hand held front panel, கருவிகள் தமிழ்நாடு

மருத்துவ பணிகள் கழகம் (TNMSC) மூலமாக ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**28.பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் 24 மணி நேரம் செயல்பட்டு வரும் 5 சமுதாய மகப்பேறு மருத்துவமனைகள், பேறுகால பின் கவனிப்பு மையம் மற்றும் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு மையத்திலும், வார்டுக்கு இரண்டு வீதம் 10 எண்ணிக்கையிலான மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன (Centralized AC) வசதி ரூ.70 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 24 மணி நேரம் செயல்பட்டு வரும் சமுதாய மகப்பேறு மருத்துவமனைகள், பேறுகால பின் கவனிப்பு மையம் மற்றும் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு மையங்களான திருவொற்றியூர், இராயபுரம், பாடி, ஷெனாய் நகர் மற்றும் அடையாறு ஆகிய 5 இடங்களில் உள்ள மையங்களுக்கு வார்டுக்கு 2 வீதம் 10 எண்ணிக்கையிலான மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன (Centralized AC) வசதி ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

29. **பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் மூன்று மாநகர சமுதாய நல மருத்துவமனைகளில் (UCHC) கூடுதல் பிரிவாக இயற்கை மருத்துவ பிரிவின் கீழ் இயற்கை மருத்துவ சிகிச்சைகள் ரூ.3 கோடி மதிப்பிட்டில் அளிக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் வடக்கு வட்டாரம், (புழல்), மத்திய வட்டாரம் (பாடி) மற்றும் தெற்கு வட்டாரம் (போரூர்) ஆகிய இடங்களில் இயங்கி வரும் மூன்று மாநகர சமுதாய நல மருத்துவமனைகளில் (UCHC) கூடுதலான மருத்துவ சேவைகளை விரிவாக்கம் செய்து பொதுமக்கள் பயன்படும் வகையில் இயற்கை மருத்துவ சேவைகள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக இந்த

மூன்று மாநகர சமுதாய நல மருத்துவமனைகளிலும், கூடுதல் மருத்துவ பிரிவுகள் அமைக்க போதிய இடவசதி இல்லாததால், முதற்கட்டமாக மூன்று கட்டிடங்கள் கீழ்கண்டுள்ள இடங்களில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டிட துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்.

1. புழல் (கூடுதலாக ஒரு தளம்) 2000 சதுர அடி
2. பாடி (A பிளாக் பழைய கட்டிடம் இடித்து புதியதாக தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டுதல்) (G+2) 4500 ச. அடி
3. போரூர் (கூடுதலாக ஒரு தளம்) 2000 சதுர அடி

30. **பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மூன்று 24 மணி நேர அவசர மகப்பேறு மையங்கள் மற்றும் 16 நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு 19 கதிரியக்க நிபுணர்கள் (RADIOLOGIST) பணியமர்த்தப்படுவார்கள்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக வரும் மருத்துவ பயனாளிகளுக்கு, கதிரியக்க சாதனம் வழியாக நோய்களை கண்டறிவதும் அவசர காலங்களில் உடனடியாக எடுக்க வேண்டிய ஸ்கேன், ஊடுகதிர், Mamogram போன்ற சேவைகள் அளிப்பதற்கும், மேலும், மருத்துவ சேவைகளை சிறப்பான முறையில் வழங்குவதற்கும், முதலாவதாக, மூன்று 24 மணி நேர அவசர மகப்பேறு மையங்கள் மற்றும் 16 நகர்ப்புற சமுதாய சுகாதார மையங்கள் என மொத்தம் 19 மையங்களுக்கு 19 எண்ணிக்கையிலான கதிரியக்க நிபுணர்கள் (RADIOLOGIST) தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள்.

**31.பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கி வரும் 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் (UCHC) மற்றும் மூன்று 24 மணி நேர அவசர கால மகப்பேறு மருத்துவ மையங்கள் (EOC) ஆக 19 மருத்துவமனைகளில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீரிழிவு விழித்திரை (Diabetic Retinopathy) நோய்க்கான பரிசோதனை செய்து சிகிச்சை மேற்கொள்ள 19 எண்ணிக்கையிலான, Lamp, Auto refractometer (A/C) and Fundus Camera ஆகிய மருத்துவ உபகரணங்கள் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** நீரிழிவு விழித்திரை (Diabetic Retinopathy) நோயானது நிரந்தரப் பார்வையின்மையை ஏற்படுத்தும் தன்மை கொண்டது என்பதால் சிறப்பு பரிசோதனைகள் மேற்கொண்டு ஆரம்ப காலத்திலேயே அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் நிரந்தர பார்வையின்மை நோயிலிருந்து பூரணமாக குணமாக்க முடியும். எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ்வரும்16 நகர சமுதாய நல மையங்கள் (UCHC) மற்றும் மூன்று 24 மணி நேர அவசர மகப்பேறு மையங்கள் (EOC) ஆக 19 மருத்துவமனைகளில், 19 எண்ணிக்கையிலான Slit Lamp, Auto refractometer (A/C), Fundus Camera ஆகிய கருவிகள் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**திடக்கழிவு மேலாண்மை துறை**

**32.பெருநகர சென்னை மாநகராட்சியின், தெற்கு வட்டார பகுதியில் 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் பதனம் (Windrow Compost Plant) செய்யும் உரம் தயாரிக்கும் நிலையம் 20 ஏக்கர் பரப்பளவில் பொது தனியார் பங்களிப்பின் (PPP) கீழ் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பயோ மைனிங் மூலம் மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் நிலையத்தை 20 ஏக்கர் பரப்பளவில் (Windrow Compost Plant) பொது-தனியார் பங்களிப்பு (PPP) நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**33.பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டாரத்தில் 2 எண்ணிக்கையிலான தலா 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் நிலையம் (Windrow Compost Plant) ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** குப்பை கொட்டும் வளாகத்தில் ஈரக்கழிவுகளை கொட்டுவதை தவிர்க்க மண்டலம்-2, வார்டு-22 மணலியில், 2 எண்ணிக்கையிலான தலா 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் உரம் தயாரிக்கும் நிலையம் (Windrow Composting Plant) ரூ.15 கோடி மதிப்பீட்டில் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**34.பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள்-4, 7 மற்றும் 8-க்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பணிகளின் பயன்பாட்டிற்கு புதிதாக Hot Dip Galvanized Compactor Bin ரூ.12 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பணியாளர்களின் பாதுகாப்பிற்கும், சுலபமாக கையாள்வதற்கும், அவர்களின் வேலையை எளிமையாக்குவதற்கும், துருப்பிடிப்பு தன்மை குறைவான, நீண்ட ஆயுட்காலம் மற்றும் குறைந்த பராமரிப்பு செலவு கொண்ட சுமார் 2,850 எண்ணிக்கையிலான Hot Dip Galvanised Compactor Bins-களை ரூ.12 கோடி மதிப்பீட்டில் மூலதன நிதியின் கீழ் கொள்முதல் செய்து மண்டலம் - 4, 7 மற்றும் 8-ற்கு தேவைக்கேற்ப பகிர்ந்து வழங்கப்படும்.

**35.கோடை காலங்களில் வெயிலின் தாக்கத்தை போக்கவும், நீர்ச்சத்தை பராமரிக்கவும், உடல் வெப்பத்தை தணிக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மை பணியாளர்களுக்கும் குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் தொடங்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மை பணியாளர்களுக்கும் கோடை காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

**36.பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும், அனைத்து ஒருங்கிணைந்த சமையலறைகளில் சிறிய அளவிலான உயிரி எரிவாயு நிலையங்களை பொது-தனியார் பங்களிப்பு (PPP) அல்லது அரசு சாரா நிறுவனங்கள் (Non Governmental Organization) மூலம் செயல்படுத்துதல்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் வகுப்பு 1 முதல் 5 வரை பயிலும் மாணவர்களுக்காக காலை உணவு சமைக்க பயன்படுத்தப்படும் 38 எண்ணிக்கையிலான ஒருங்கிணைந்த சமையலறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை பணியாளர்களுக்கான உணவு சமைக்க பயன்படுத்தப்படும் 11 எண்ணிக்கையிலான ஒருங்கிணைந்த சமையலறைகளில் சிறிய அளவிலான உயிரி எரிவாயு (Bio–Gas plant) நிலையங்களை, பொது-தனியார் பங்களிப்பு (PPP) அல்லது அரசு சாரா நிறுவனங்கள் (Non Governmental Organization) மூலம் சாத்தியமுள்ள உகந்த

சமையலறைகளில் நிறுவி அவர்களின் மூலமே செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## இயந்திர பொறியியல் துறை

**37.இயற்கை எரிவாயுவால் இயங்கும் (CNG) 30 எண்ணிக்கையில் புதிய கனரக டிப்பர் வாகனங்கள் ரூ.9.60 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் 10 வருடங்களுக்கு மேல் பயன்பாட்டில் உள்ள கனரக வாகனங்களுக்கு மாற்றாக இயற்கை எரிவாயுவால் இயங்கும் (CNG) 8.5 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட 30 எண்ணிக்கையிலான கனரக டிப்பர் வாகனங்கள் ரூ.9.60 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**38.பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலைகளை சுத்தம் செய்யும் பணிக்காக 20 எண்ணிக்கையில் மின்கலத்தில் இயங்கும் சிறிய வகை இயந்திரப் பெருக்கி வாகனங்கள் (Battery Operated Mechanical Sweeper Mounted on LMV Vehicle) ரூ.8 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை இயந்திரம் கொண்டு பெருக்கி தூய்மைப்படுத்தும் பணிக்கென 20 எண்ணிக்கையில் சிறியவகை இயந்திரப் பெருக்கி வாகனங்கள் (Battery Operated Mechanical Sweeper Mounted on LMV Vehicle) ரூ.8 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**39.பெருநகர சென்னை மாநகராட்சியில் பேருந்து நிழற்குடைகள் மற்றும் நடைபாதைகளை தண்ணீர் மூலம் சுத்தம் செய்யும் பணிக்காக 10 எண்ணிக்கையில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட Jet Washer Mounted இயற்கை எரிவாயு (CNG) மூலம் இயங்கும் இலகுரக வாகனங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்களில் பேருந்து நிழற்குடைகள் மற்றும் நடைபாதைகளை தண்ணீர் மூலம் சுத்தம் செய்வதற்காக 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட Jet Washer Mounted இயற்கை எரிவாயு (CNG) மூலம் இயங்கும் 10 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**40.பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் காற்று மாசினை தடுக்கும் பணிக்காக CANON Mist Blower Machine பொருத்தப்பட்ட இயற்கை எரிவாயுவில் (CNG) இயங்கும் எட்டு வாகனங்கள் ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் காற்று மாசினை தடுக்கும் பொருட்டு காற்றில் பரவும் தூசியினை தண்ணீர் புகை கொண்டு படிய வைக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக கனரக அடிச்சட்டத்தில் பொருத்தப்பட்ட CANON Mist Blower Machine Mounted on HMV Truck (CNG) இயந்திரம் இரண்டு எண்ணிக்கையிலும் மற்றும் இலகுரக அடிச்சட்டத்தில் பொருத்தப்பட்ட CANON Mist Blower Machine Mounted on LMV Truck (CNG) இயந்திரம் ஆறு எண்ணிக்கையிலும் ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**41. பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பயன்பாட்டிற்காக இயற்கை எரிவாயுவில் (CNG) இயங்கும் 50 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 மண்டலங்களில் பல்வேறு பணிகளின் பயன்பாட்டிற்கான இயற்கை எரிவாயுவில் (CNG) இயங்கும் 50 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

## பூங்கா மற்றும் விளையாட்டு திடல் துறை

**42. சென்னை மாநகர மக்களின் உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கவும், மன அழுத்தத்தை போக்கவும் அவர்களுடைய காலை பொழுது மகிழ்ச்சியுடனும் சுறுசுறுப்புடன் தொடங்கவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் முதற்கட்டமாக 200 பூங்காக்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் அறிவியல் பூர்வமாக பொலிவேற்றம் செய்வதற்கு ரூ.60 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** 2026-27-ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 955 பூங்காக்களில் முதற்கட்டமாக 200 பூங்காக்கள் அறிவியல் பூர்வமாக பொலிவேற்றம் செய்யப்படும். அதற்காக, உரிய தாவர அமைப்புகள், பொலிவான வருகையாளர் ஓய்விடங்கள் மற்றும் இருக்கைகள், மரங்களில் பறவைகள் வாழ்விட அமைப்புகள், இயற்கை சூழலை மக்கள் பூங்காக்களில் உணரும் வண்ணம் மரங்களில் செயற்கையான பறவைகளின் ஒலிகள் வழங்கும் அமைப்புகள் அமைத்தல், சிறார்களை கவரும் வண்ணம் சிறுகுளங்கள் மற்றும் நீர்ப்பறவைகள் போன்ற அமைப்புகள், தற்காலத்திற்கேற்றவாறு நடைபாதைகள் மற்றும்

ஒளிவிளக்குகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்த ரூ.60 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**43.பெருநகர சென்னை மாநகராட்சியால் உருவாக்கி பராமரிக்கப்பட்டு வரும் 25 எண்ணிக்கையிலான பூங்காக்களில் நீர் உறிஞ்சுதல் (Sponge Park) அமைப்பு ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** 2026-27-ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும், பருவமழை காலங்களில் கிடைக்கும் நீரினை முழுமையாக சேமிக்கும் வகையிலும், முதற்கட்டமாக 1,000 சதுர மீட்டருக்கு மேல் உள்ள 25 எண்ணிக்கையிலான பூங்காக்களில், ஒரு பூங்காவிற்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நீர் உறிஞ்சுதல் (Sponge Park) அமைப்பு அமைக்கப்படும்.

**44.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில், மழை நீர் சேகரிப்பு (Rain Water Harvesting) திட்டம் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** 2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில், முதற்கட்டமாக 200 பூங்காக்களில் நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும் பூங்காவிற்கு வரும் மக்களிடம் மழை நீர் சேகரிப்பை கொண்டு சேர்க்கும் விதத்திலும், ஒரு பூங்காவிற்கு ரூ.10 இலட்சம் வீதம் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மழை நீர் சேகரிப்பு (Rain Water Harvesting) திட்டம் மேற்கொள்ளப்படும்.

**45.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 5 பூங்காக்களில் சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Parks for Special Children) பூங்காக்களாக ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

**அறிவிப்பு:** 2026–27ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான

1) மண்டலம்-2, கோட்டம்-15, மணலி நியு டவுன், Block No.26, CPS-10 பூங்கா.
2) மண்டலம்-5, கோட்டம்-53, தங்கசாலை பூங்கா
3) மண்டலம்-7, கோட்டம்-83, மதனகுப்பம் பூங்கா
4) மண்டலம்-8, கோட்டம்-103, டாக்டர். விஸ்வேஸ்வரைய்யா டவர் பூங்கா.
5) மண்டலம்-13, கோட்டம்-123, ராஜிவ் காந்தி சாலை பூங்கா ஆகிய 5 பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Parks for Special Children) சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**46.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் பசுமை மரங்கள் மூலம் பிராணவாயு (Oxygen) உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக, சென்னை நகர மக்களின் கூட்டு முயற்சியில் பசுமை பரப்பை அதிகரிக்க, பொதுமக்கள் பங்கேற்கும் "பசுமை சென்னை திட்டம்" என்கிற திட்டம் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அறிமுகம் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** 2026-27ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுடன் இணைந்து பசுமைப் பரப்பை பெருமளவில் அதிகரிக்க மாடம்பாக்கம், கைலாசபுரம் (மயிலாப்பூர்) (மண்டலம்-9) மற்றும் சாத்தாங்காடு (மண்டலம்-2) ஆகிய இடங்களில்

நாற்றங்கால் பண்ணைகள் ஏற்படுத்தி அங்கு வனத்துறையின் உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, பொது மக்களுக்கு விலையில்லாமல் வழங்குவதோடு அவர்கள் உள்ளார்ந்த பங்கேற்புடன், சென்னை மாநகராட்சி பகுதிகளில் பசுமைப்பரப்பை அதிகரிக்க இம்மரக்கன்றுகளை நடவு செய்து, சென்னையை பசுமை மிக்க நகரமாக மாற்ற ரூ.10 கோடி மதிப்பீட்டில் **"பசுமை சென்னை திட்டம்"** என்கிற திட்டம் அறிமுகம் செய்யப்படும்.

**47.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 50 விளையாட்டு திடல்கள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** 2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ள 50 விளையாட்டு திடல்களை மேம்படுத்தவும் மற்றும் புதிய விளையாட்டு உபகரணங்களை ரூ.20 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**48.விளையாட்டு திடல்களில் நீர் தேங்குவதை தடுக்கவும், விளையாட்டு திடல்களை பொதுமக்கள் தடையின்றி பயன்படுத்தவும், திடலுக்கு அருகில் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அதிக பரப்பளவு கொண்டுள்ள ஐந்து விளையாட்டு திடல்களில் ECO BLOC-ஐ பயன்படுத்தி நீர் உறிஞ்சும் வகையில் மழைநீர் சேமிப்பு தொட்டிகள் (ECO BLOC based Sponge Park) ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** 2026-2027 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட மண்டங்களில் அதிக பரப்பளவு உள்ள விளையாட்டு திடல்களான:

1) மண்டலம்-1, கோட்டம்-4, ஜோதி நகர்.
2) மண்டலம்-2, கோட்டம்-16, பர்மா நகர்.
3) மண்டலம்-2, கோட்டம்-16, எம்.ஆர்.பி.நகர், மணலி நியு டவுன்.
4) மண்டலம்-2, கோட்டம்-22, வழுதலைமேடு சின்ன சேக்காடு.
5) மண்டலம்-13, கோட்டம்-173, கெனால் பேங்க் ரோடு, காந்தி நகர், அடையாறு,

ஆகிய 5 விளையாட்டு திடல்கள் ECO BLOC-ஐ பயன்படுத்தி நீர் உறிஞ்சும் வகையில் மழைநீர் சேமிப்பு தொட்டிகள் (ECO BLOC based Sponge Park) ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**மழைநீர் வடிகால் துறை**

49. **பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அம்பத்தூர் ஏரி (மண்டலம்- 7), மஞ்சம்பாக்கம் ஏரி (மண்டலம்-2), மற்றும் மண்டலம்-15ல் உள்ள புல்லக்கேணி குளம், வையாபுரி குளம், சாலிமார் கார்டன் குளம் என முக்கியமான மற்றும் பயன்பாட்டிற்கு அதிகம் தேவையான 30 நீர்நிலைகளை புனரமைத்து, அதன் கொள்ளளவை அதிகரிக்கவும், மழைநீர் சேமிக்கும் திறனை அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

50. **பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீர்வழி கால்வாய்களில் தடுப்புச்சுவர் இல்லாமல் விடுபட்ட இடங்களில் இணைப்பு வெள்ள தடுப்பு சுவர் அமைக்க ரூ.55 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தடுப்புச்சுவர் இல்லாத 44 நீர்வழி கால்வாய் இடங்களில் புதிதாக வெள்ள பாதுகாப்பு தடுப்புச்சுவர் (Flood Protecting Retaining Wall) அமைத்து, அதன் மேல் சங்கிலி இணைப்பு வேலி (Chain Link Fencing) உள்ளிட்ட பணிகள் ரூ.55 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**சிறப்பு திட்டங்கள் துறை**

**51. ஜார்ஜ்டவுன், கத்திவாக்கம், துரைப்பாக்கம், பள்ளிக்கரணை, இராமாபுரம், ஸ்ரீ நகர், நங்கநல்லூர், என்.ஜி.ஓ காலனி ஆதம்பாக்கம் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள மாநகர பேருந்து பணிமனைகளை (Bus terminus) பொது-தனியார் கூட்டாண்மை (PPP)/ வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் மறுவடிவமைப்பு செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பேருந்து பணிமனைகளின் சேவை தரத்தை மேம்படுத்தவும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பொருளாதார ஆற்றலை வெளிக்கொணரவும், பொதுப்போக்குவரத்து உள்கட்டமைப்பை நவீன மயமாக்கவும், பொது நிதி மீதான சுமையை குறைக்கவும், பொதுமக்களின் அதிக பயன்பாட்டில் உள்ள ஜார்ஜ்டவுன் (மண்டலம்-4), கத்திவாக்கம் (மண்டலம்-1), துரைப்பாக்கம், பள்ளிக்கரணை (மண்டலம்-15), இராமாபுரம், ஸ்ரீ ராம் நகர் (மண்டலம்-11), நங்கநல்லூர் (மண்டலம்-12), என்.ஜி.ஓ காலனி ஆதம்பாக்கம் (மண்டலம்-13) மற்றும் மடிப்பாக்கம் (மண்டலம்-14) ஆகிய முக்கிய இடங்களில் உள்ள பேருந்து பணிமனைகள் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) / வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் மறுவடிவமைப்பு செய்யப்படும்.

**52.வெள்ள அபாயம், போக்குவரத்து நெரிசல் போன்றவற்றுக்கு திட்டமிடுவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கான நகர்ப்புற தரவு களஞ்சியம் (Urban Data Observatory), உட்கட்டமைப்பு மேலாண்மை மென்பொருள் (Asset Management Software) மற்றும் சென்னை நகரத்திற்கான டிஜிட்டல் ட்வின் (Digital Twin) என்கிற திட்டம் செயல்படுத்தப்படும்.**

**அறிவிப்பு:** சென்னையின் 5 சதுர கி.மீ பரப்பளவிலான நுங்கம்பாக்கம், கல்லூரி சாலை, கிரீம்ஸ் சாலை மற்றும் அண்ணா சாலையை உள்ளடக்கிய பகுதியை, செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பத்துடன் கூடிய ஒரு டிஜிட்டல் ட்வின் (Digital Twin) திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. நகர்ப்புற தரவு களஞ்சிய திட்டம் (Urban Data Observatory) சென்னை நகர மேம்பாட்டின் அனைத்து துறைகளிலும் 'data-driven' திட்டமிடலை வலுப்படுத்தும் ஒரு முன்னோடியான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய (ICCC) தரவுகள், ஐஓடி (IoT) சென்சார்கள், புவிசார் (GIS), 3D/4D உருவகப்படுத்துதல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெள்ள அபாயம், போக்குவரத்து நெரிசல் மற்றும் அவசர கால நிகழ்வுகளை திட்டமிட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள பயனுள்ளதாக அமையும்.

**53.சென்னை உயர்நீதிமன்றம் முதல் செயின்ட் ஆண்ட்ரூஸ் தேவாலயம் வரை தொன்மை மாறாமல் வண்ணமயமான அலங்கார விளக்குகளுடன் கூடிய பாரம்பரிய வழித்தடமாக புதுப்பிக்க ரூ.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** சென்னை உயர்நீதிமன்றம் முதல் செயின்ட் ஆண்ட்ரூஸ் தேவாலயம் வரையிலான 3.3 கிலோ மீட்டர் நீளமுள்ள நகரத்தின்

வரலாற்று சிறப்பு மிக்க முக்கிய பாதையினை, அதன் தொன்மை மாறாமல் சூழலுக்கு ஏற்ற பாதையாக வடிவமைத்தல் மற்றும் அனைவரையும் கவரும் வகையில் வண்ண மயமான அலங்கார விளக்குகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

54. **பக்கிங்ஹாம் கால்வாய் வழித்தடத்தில் தொடர்ச்சியான நடைபாதை, மிதிவண்டி பாதை, மியாவாக்கி குறுங்காடு, குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், இருக்கை வசதிகளுடன் கூடிய நகர்ப்புற பசுமையாக்கல் திட்டம் (Urban Greening) ரூ. 45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு :** MRTS நிலையங்களுக்கு அருகில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பசுமைப்பகுதி மாற்றங்களின் தொடர்ச்சியாக கஸ்தூரிபாய் நகர் சந்திப்பின் வடக்கு முனையிலிருந்து திருவான்மியூர் தெற்கு பகுதி வரையிலான பக்கிங்ஹாம் கால்வாய் வழித்தடத்தை ஒளிமயமான மற்றும் அழகான பொது இடமாக மாற்றவும், இந்த வழித்தடத்தில் வசிக்கும் மக்களுக்கு உயர்தர பொழுது போக்கு வசதிகளையும் காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் திறனை வளர்க்கவும் இப்பாதையில் தொடர்ச்சியான நடைபாதை, மிதிவண்டிப்பாதை, மியாவாக்கி குறுங்காடுகள், மற்றும் இருக்கை வசதிகள் அமைத்தல், நாட்டு மரக்கன்றுகள் நடுதல் மற்றும் இயற்கை சார்ந்த வடிகால் அமைப்புகள் மூலம் பல்லுயிர் பெருக்கம் மற்றும் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள் நகர்ப்புற பசுமையாக்கல் திட்டத்தின் (Urban Greening) மூலம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**55.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள அண்ணாநகர், தியாகராய நகர், நுங்கம்பாக்கம், அடையாறு, பெசன்ட்நகர் போன்ற இடங்களில்**

**மின்வாகன மின்னேற்ற நிலையங்கள் (Electrical Vehicle Charging Station) Station) அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களான அண்ணா நகர், தியாகராய நகர், நுங்கம்பாக்கம், அடையாறு, பெசன்ட் நகர் போன்ற இடங்களில் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்படவுள்ளன. சென்னையில் தூய்மையான போக்குவரத்து மாற்றத்தை ஏற்படுத்த, இந்த வாகன நிறுத்தம் உள்ள இடங்களில் மின் வாகனத்திற்கான மின்னேற்ற நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. ஒரு வாகன நிறுத்த இடத்தில், தலா இரண்டு மின்னேற்ற நிலையங்கள் அமைப்பதுடன், தனியார் வாகனங்கள், வாடகை கார்கள் மற்றும் டெலிவரி வாகனங்களுக்கு எளிதான வசதியை இது உறுதி செய்யும். பாதுகாப்பான மின்விளக்கு வசதி, வழிகாட்டி பலகைகள் மற்றும் வாகன நிறுத்தங்களுடன் இவை ஒருங்கிணைக்கப்படும்.

**56.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கடற்கரைகளை இணைக்கும் வகையிலும், MRTS, மெட்ரோ நிலையம், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் புறநகர் இரயில் நிலையங்களை இணைக்கும் வகையிலும் சாத்தியமுள்ள வழித்தடங்களில் நடைபாதை பயண மற்றும் மிதிவண்டி பாதை (Non-Motorised Transport Corridor) 25 கி.மீ தூரத்திற்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு :** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மெரினா, பெசன்ட் நகர், திருவான்மியூர் கடற்கரைகளை இணைக்கும் வகையிலும், MRTS, மெட்ரோ நிலையம், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் புறநகர் இரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் சாத்தியமுள்ள வழித்தடங்களில் நடைபாதை மற்றும் மிதிவண்டிப்பாதை (Non- Motorised Transport Corridor) 25 கி.மீ தூரத்திற்கு அமைப்பதுடன், இதில் அகலமான

நடைபாதைகள், பிரத்யேக மிதிவண்டி பாதைகள், நிழல் தரும் இருக்கைகள் மற்றும் பொதுப் போக்குவரத்துடன் இணைக்கும் வசதிகளுடன் இடம்பெறும். பாதுகாப்பான நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதைகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**57.சென்னை பள்ளிகளுக்கு பாதுகாப்பான வழித்தடங்கள் (Safe Routes to Schools) 50 கி.மீ தூரத்திற்கு ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** தண்டையார்பேட்டை, இராயபுரம், வண்ணாரப்பேட்டை மற்றும் கே.கே.நகர் ஆகிய பள்ளி மண்டலங்கள் உள்ள பகுதிகளில் தலா 10 கி.மீ தூரத்திற்கு வாகன வேகத்தை குறைக்கும் நடவடிக்கைகள், அகலமான நடைபாதைகள், பாதுகாப்பான சாலை கடப்புகள் (Crossings), உயர்தர மின் விளக்குகள் மற்றும் வழிகாட்டி பலகைகள் அமைப்பது போன்ற பணிகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**58. மின்ட் சாலை – வண்ணாரப்பேட்டை மெட்ரோ மற்றும் சேப்பாக்கம் – மெரினா ஆகிய இடங்களில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் பன்முக போக்குவரத்து ஒருங்கிணைப்பு (Multi-Modal Integration) அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** முக்கிய போக்குவரத்து சந்திப்புகளில் ஏற்படும் நெரிசலையும், பயண நேரத்தையும் கணிசமாக குறைக்கவும், சென்னையின் பொது போக்குவரத்து வலையமைப்பை வலுப்படுத்தவும் மற்றும் நிலையான, மகிழ்ச்சியான, பாதுகாப்பான போக்குவரத்து பயணத்தை மக்களுக்கு ஏற்படுத்தவும், மின்ட் சாலை – வண்ணாரப்பேட்டை மெட்ரோ மற்றும் சேப்பாக்கம் – மெரினா ஆகிய இடங்களில் மெட்ரோ இரயில், புறநகர் இரயில், பேருந்துகள், பாதசாரிகள், மிதிவண்டி பயணிகள் மற்றும் கடைசி மைல் இணைப்பு சேவைகளை (Last-Mile Services) தடையின்றி

இணைக்கும் போக்குவரத்து மையங்கள் ரூ.40 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**59. பெருநகர சென்னை மாநகராட்சியில் ஸ்மார்ட் பார்க்கிங் மேலாண்மை திட்டம் (Smart Parking Management) பொது - தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் 20 இடங்களில் செயல்படுத்தப்படும்.**

**அறிவிப்பு :** மெரினா, பெசன்ட் நகர், வண்ணாரப்பேட்டை, நுங்கம்பாக்கம் உள்ளிட்ட 20 முக்கிய பகுதிகளில் சீரமைக்கப்பட்ட ஸ்மார்ட் பார்க்கிங் மேலாண்மை திட்டம் (Smart Parking Management System) செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தில் சீரமைக்கப்பட்ட சாலையோர வாகன நிறுத்தம், டிஜிட்டல் மற்றும் QR குறியீடு வழி கட்டணம், கேமரா அடிப்படையிலான கண்காணிப்பு, டிஜிட்டல் பகுப்பாய்வு (Digital Analytics) போன்ற பணிகள் பொதுத்–தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் நகரம் முழுவதும் ஸ்மார்ட் பார்க்கிங் வாகன நிறுத்த மேலாண்மை திட்டம் (Smart Parking) செயல்படுத்தப்படும்.

**60. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நொளம்பூர் ஏரி, இராமந்தாங்கல் ஏரி மற்றும் சுப்பிரமணிய ஏரிகளை, காலநிலை பருவமாற்றம் (Climate resilience) நீலம், பச்சை உட்கட்டமைப்பினை (Blue Green Infrastructure) உள்ளடக்கிய Bio Filtration Zones, நடைபாதை மற்றும் இதர வசதிகளுடன் ரூ.35 கோடியில் மேம்படுத்தப்படும்.**

**அறிவிப்பு:** காலநிலை மீள்திறன் மற்றும் நீல-பச்சை உள்கட்டமைப்பு, கரைகளை பலப்படுத்துதல், தூர் வாருதல், ஈர நிலங்கள் மற்றும் உயிரி வடிகட்டுதல், மண்டலங்களை உருவாக்குதல் (Bio Filtration Zones), நடைபாதை, நிழற்குடைகள், இருக்கைகள், பார்வையாளர் தளங்கள், இயற்கை நீரியல் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாத்தல், நீர்

தரத்தை மேம்படுத்துதல், நிலத்தடி நீரை அதிகரித்தல், சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகளில் வெள்ள அபாயங்களை குறைத்தல் மற்றும் நகர்ப்புற வெப்பத்தை தணித்தல் போன்ற பணிகளுக்காக நொளம்பூர் ஏரி, இராமந்தாங்கல் ஏரி மற்றும் சுப்பிரமணிய ஏரி ஆகிய மூன்று முக்கிய நகர்ப்புற ஏரிகள் ரூ.35 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**61. மெரினா கடற்கரையில் கலங்கரை விளக்கம் (Light House) முதல் அண்ணா நினைவிடம் வரை பொது தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கயிறு வழித்தடம் (Rope way car) அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் (Light House) முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட (Rope way car) வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்தக் கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலா பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்தக் கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை (Panoramic views) வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கயிறு வழித்தடங்கள் (Rope way car) அமைக்கப்படும்.

**பாலங்கள் துறை**

**62. மண்டலம்-8, சேத்துப்பட்டு, டாக்டர் குருசாமி பாலத்தை ஒட்டியுள்ள மெக்னிக்கல்ஸ் சாலையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க இரயில்வே இருப்பு பாதையின் குறுக்கே ஈ.வெ.ரா. பெரியார் சாலையை இணைக்கும் வண்ணம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை (3.60 மீட்டர்) அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** சேத்துபட்டு, டாக்டர் குருசாமி பாலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, சேத்துப்பட்டு மெக்னிக்கல்ஸ் சாலை பகுதியிலிருந்து ஈ.வெ.ரா. பெரியார் சாலையை எளிதில் சென்றடையும் வகையில் இரயில்வே இருப்புப்பாதையின் குறுக்கே ரூ.25 கோடி மதிப்பீட்டில் இலகுரக வாகனங்கள் செல்லும் வகையில் ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை (3.60 மீட்டர்) அமைக்கப்படும்.

**63. மண்டலம்-13, வார்டு-175ல் கக்கன் பாலத்தை புனரமைக்கவும் மற்றும் 176ல் நடைபாலம் கட்டுவதற்கும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** சீனிவாசா நகர் மற்றும் கோமதி நகரில் வசிக்கும் பொதுமக்கள் மழைக்காலங்களில் வீராங்கல் ஓடையை கடந்து 200 அடி உள்வட்ட சாலையை அடைய இணைப்பு பாலங்கள் எதுவும் இல்லாததால் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, பொதுமக்களின் சிரமத்தை நீக்கும் வகையில் மண்டலம்-13, வார்டு-176 வேளச்சேரியில் வீராங்கல் ஓடையின் குறுக்கே (i) சீனிவாச நகர் 2வது தெருவையும் 200அடி உள்வட்டசாலை (ii) கோமதி நகரை 200 அடி உள்வட்ட சாலை என இவ்விரு இடங்களையும் இணைக்கும் நடைபாலம் அமைக்கவும், (iii) மண்டலம்-13, வார்டு-175ல் தற்போதுள்ள கக்கன் பாலத்தை புனரமைத்து, 3-Vent கொண்ட புதிய பெட்டக வடிவ பாலம் அமைக்கவும் மற்றும் (iv) மண்டலம்-13, வேளச்சேரி பிரதான சாலையின் குறுக்கே ராஜ்பவன் காலனி வழியாக செல்லும் கால்வாய் பாலத்தை அகலப்படுத்துதல் போன்ற பணிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**64. மண்டலம்-9, வார்டு-109, விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே வட அகரத்தில் பழுதடைந்துள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதியதாக பாலம் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே வட அகரத்திலுள்ள பாலம் மிகவும் வலுவிழந்துள்ளதாலும், பொதுமக்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டும், இப்பாலத்தினை முற்றிலுமாக இடித்து விட்டு மூலதன நிதியிலிருந்து ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கப்படும்.

**65. மண்டலம்-10, வார்டு-141 மற்றும் மண்டலம்-13, வார்டு-169ல் மாம்பலம் கால்வாயின் குறுக்கே மூப்பாரப்பன் தெரு மற்றும் சிஐடி நகர் வடக்கு சாலையில் பழுதடைந்துள்ள பழைய பாலங்களை இடித்து விட்டு, மொத்தம் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் புதியதாக இரண்டு பாலங்கள் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** மண்டலம்-10, வார்டு-141 மற்றும் மண்டலம்-13, வார்டு-169ல் அமைந்துள்ள மாம்பலம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலங்கள் மிகவும் வலுவிழந்துள்ளதாலும், மழைக்காலங்களில் வெள்ள நீர் வெளியேறி உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதாலும் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, அப்பகுதி மக்களின் சிரமத்தை போக்கும் வகையில், இப்பாலங்களை முற்றிலுமாக இடித்து விட்டு மூலதன நிதியிலிருந்து மொத்தம் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் இரண்டு புதிய பாலங்கள் அமைக்கப்படும்.

**66. மண்டலம்-4, வார்டு-35ல் கொடுங்கையூர் கால்வாயின் குறுக்கே தெற்கு அவென்யூ சாலையில் பழுதடைந்துள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதியதாக பாலம் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** கொடுங்கையூர் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலம் மிகவும் வலுவிழந்துள்ளதால், பொதுமக்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, இப்பாலத்தினை முற்றிலுமாக இடித்துவிட்டு மூலதன நிதியிலிருந்து ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கப்படும்.

**67. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-9 மற்றும் 13ல் உள்ள பாதசாரிகள் நடை மேம்பாலத்தை பொதுமக்கள் சிரமமின்றி பயன்படுத்தும் வகையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மின்தூக்கிகள் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-9, வார்டு-111ல் உள்ள ஹேடோஸ் சாலை, வார்டு-115-ல் உள்ள பீட்டர்ஸ் சாலை மற்றும் மண்டலம்-13, வார்டு-171-ல் உள்ள தாலுக்கா அலுவலக சாலை ஆகிய 3 சாலைகளில் உள்ள நடை மேம்பாலத்தை பாதசாரிகள், வயதான பொதுமக்கள் சிரமமின்றி பயன்படுத்தும் வகையில் 5 ஆண்டுகளுக்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளும் வகையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மின்தூக்கிகள் அமைக்கப்படும்.

**கட்டிட துறை**

**68. பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 இடங்களில் மயான பூமிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட 50 மயான பூமிகளில் உள்ள சுற்றுச்சுவர் மற்றும் மயான பூமி வளாகத்தை நவீன முறையில் மேம்படுத்த ரூ.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**69. பெருநகர சென்னை மாநகராட்சியில் புதியதாக 6 இடங்களில் இரவு காப்பகம் மொத்தம் ரூ 9 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 6 இடங்களில் வீடற்றோர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய இரவு காப்பகம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) மொத்தம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**70. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் இடம் பெயரும் தொழிலாளர்கள், வீடில்லாத நபர்கள் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 200 தற்காலிக / இடைநிலை தங்குமிடங்கள் (கன்டெய்னர்-கொள்கலன் வீடுகள்) ரூ.12 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெயரும் தொழிலாளர்கள், வீடில்லாத நபர்கள் / குடும்பங்கள் (Family Homeless) தற்காலிகமாக தங்குவதற்கு 200 தற்காலிக / இடைநிலை தங்குமிடங்கள் (Container - Temporary Homes) ரூ.12 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**71. பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் பெண்கள், குழந்தைகள், மாற்று திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் சமூகத்தின் அடிப்படை உரிமை, பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்து உண்மை தரவுகளை அடிப்படையாக கொண்டு சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சமூக மேப்பாட்டை வலுப்படுத்த ரூ.1 கோடி மதிப்பீட்டில் சமூக-பொருளாதார மேம்பாட்டு பிரிவு உருவாக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின் கௌரவமான வாழ்க்கைக்காக, அடிப்படை வசதிகள் மற்றும் உரிமைகளை உறுதி செய்ய, பெண்கள், குழந்தைகள், முதியோர், மாற்று திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் சமூகத்தினருக்கான நலத்திட்டங்கள், பாதுகாப்பு, புகார் தீர்வு மற்றும் விழிப்புணர்வை ஒருங்கிணைத்து, கள ஆய்வுகள் மற்றும் சமூக–பொருளாதார கணக்கெடுப்புகளின் உண்மை தரவுகளை அடிப்படையாக கொண்டு சமூக ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டை வலுப்படுத்த ரூ.1 கோடி மதிப்பீட்டில் “சமூக–பொருளாதார மேம்பாட்டு பிரிவு” (Socio-Economic Development Wing) புதிதாக உருவாக்கப்படும்.

**72. குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவருக்கும் விளையாட்டு, கலை, கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்குகளை ஊக்குவிக்கும் நோக்கில், மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு என்கிற பிரிவு பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர மக்களின் மனநலம், மனநலம், சமூக இணைப்பு மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில், குழந்தைகளை திரை சார்ந்த பழக்கங்களிலிருந்து பாரம்பரிய விளையாட்டு மற்றும் கலை சார்ந்த கலாச்சார செயல்பாடுகளில், ஆர்வத்தை ஏற்படுத்தவும், இளைஞர்கள் மற்றும் முதியோர் உட்பட

அனைத்து தரப்பினருக்கும் மன–உடல் நலத்தை ஊக்குவிக்கவும், மக்களிடையே அன்பையும், நட்பையும் வளர்க்கும் பொழுது போக்குகளை ஊக்கப்படுத்தவும், பொது மற்றும் பொழுதுபோக்கு இடங்கள், மக்கள் இணையும் நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளை உருவாக்கும் வகையில் 'மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு பிரிவு (Happiness and Recreation Wing) பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்படும்.

**பேருந்து சாலைகள் துறை**

**73. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பொது இடங்களில் வழிகாட்டும் மற்றும் அறிவிப்பு பலகைகள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**அறிவிப்பு:** 2026-2027-ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக 300 முக்கிய சாலைகளில் படங்களுடன் கூடிய வழிகாட்டுதல் மற்றும் அறிவிப்பு பலகைகள், முக்கிய தலங்களின் விவரங்கள் அடங்கிய அறிவிப்பு பலகைகள், எச்சரிக்கை அறிவிப்புடன் கூடிய பெயர் பலகைகள், பள்ளி பகுதிகளில் விழிப்புணர்வு பலகைகள், வேகத்தடைகள் மற்றும் நடைபாதையில் அறிவிப்புப் பலகைகள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**74. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய சாலை சந்திப்புகளை மேம்படுத்த ரூ.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** போக்குவரத்து சிக்னலில் காத்திருப்போர் மற்றும் வாகனத்தில் அந்தச் சந்திப்பை கடந்து செல்பவர்கள் சிரமமின்றி எளிதாக பாதுகாப்பாக பயணிப்பதற்கும் அவர்களின் மனநிலையை மாற்றவும், அவர்களின் காத்திருப்பு நேரத்தை மறந்திடும் வகையிலும், மாநகராட்சியில் உள்ள 100

முக்கிய பிரதான சாலை சந்திப்புகளை அழகுற மேம்படுத்தும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**75. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட எருக்கஞ்சேரி மேம்பாலத்தின் கீழ்பகுதியில் மேம்படுத்துதல் மற்றும் அழகுபடுத்தும் பணி ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** 2026-2027 ஆம் நிதியாண்டில் எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மேம்பாலத்தின் கீழ்பகுதி (வியாசர்பாடி சந்திப்பினை) ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தி அழகுப்படுத்தப்படும்.

**76. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய 15 பேருந்து தட சாலைகளில் வேகத்தடை, ஒலிப்பெருக்கி மற்றும் கட்டை தூண்கள் நிறுவுதல் போன்ற பணிகள் ரூ.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** 2026-2027 ஆம் நிதியாண்டில் மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள கீழ்கண்ட 15 பேருந்து தட சாலைகளை அகலப்படுத்தி சாலையை கடந்து செல்ல சாலையின் குறுக்கே கான்கிரீட்டிலான மேடை வேகத்தடை (Concreate Table top) அமைத்தல், எச்சரிக்கை மற்றும் அறிவிப்பு பலகைகள், கட்டை தூண்கள் (Bollards) நிறுவுதல் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பிற்காக ஒலிப்பெருக்கி அமைக்கும் பணிகள் போன்ற அனைத்து வகையான பாதுகாப்பு அம்சங்களுடன் ரூ.45 கோடி மதிப்பீட்டில் பேருந்து தட சாலைகள் மேம்படுத்தப்படும். மண்டலம் வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சாலையின் விவரம் கீழ்கண்டவாறு:-

| மண்டலம் | வார்டு எண் | சாலையின் பெயர் |
|---|---|---|
| 1 | 7 | பேசின் சாலை |
| 2 | 16 | கொசப்பூர் ஆண்டார் குப்பம் சாலை |
| 2 | 19 | எம்.எம்.டி.ஏ 2வது பிரதான சாலை |
| 2 | 19 | எம்.எம்.டி.ஏ 3வது பிரதான சாலை |
| 7 | 84 | வடக்கு நிழற்சாலை |
| 7 | 90 & 93 | பாடிகுப்பம் பிரதான சாலை |
| 7 | 91 & 93 | சர்ச் தெரு |
| 10 | 137 | ஏரிக்கரை சாலை |
| 10 | 138 | அண்ணா பிரதான சாலை |
| 10 | 138 | அசோக் பில்லர் சாலை |
| 10 | 139 | கங்கையம்மன் கோயில் சாலை |
| 11 | 146,147&150 | ஆலப்பாக்கம் பிரதான சாலை |
| 11 | 155 | பாரதி சாலை |
| 13 | 170 | மேற்கு கால்வாய் சாலை |
| 15 | 199 | TNHB ஏ சாலை |

**77. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சேதமடைந்த சாலை பகுதிகளை சீரமைக்க**

**நவீன மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் இயந்திரங்கள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளில் ஏற்படும் ஒட்டுப்பணிகள் தார்கலவை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கலவை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. நவீன மறுசுழற்சி சாலை பழுதுபார்க்கும் இயந்திரத்தின் மூலம் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே சேதமடைந்த பகுதிகளை அகச்சிவப்பு (Infrared) வெப்பமானி மூலம் சூடாக்கி தார்கலவையுடன் கலந்து சீரமைக்கப்படும், இதனால் சாலை ஒட்டுப்பணி மேற்கொள்ளும் பகுதி, சாலை பகுதியுடன் சரிசமமாக (Seamless) இணைக்கப்படுவதால் எவ்வித மேடு பள்ளம் இல்லாமல் சீராக அமையும் என்பதால், 2026-2027 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் ஏற்படும் ஒட்டுப்பணிகளுக்கு நவீன மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் இயந்திரங்கள் (Infra Red Recycling Road repair mobile machines) கொள்முதல் செய்து முதற்கட்டமாக பத்து எண்ணிக்கையிலான நவீன மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் கனகர வாகனங்கள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும். இந்த மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் கனகர வாகனங்கள் மூன்று வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர் மூலம் சாலை பழுது பார்க்கும் பணிகள் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**78. சென்னை மாநகரில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்காக நீர்நிலைகளை ஒட்டி அமைந்துள்ள சாலைகளை (Tank Bund Roads) மேம்படுத்தி போக்குவரத்துக்கு உகந்த சாலைகளாக அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிவிட்ட காரணத்தால், பொதுமக்கள் பேருந்து மற்றும் இதர போக்குவரத்தை பயன்படுத்துவதற்கு தற்போது உள்ள சாலைகள் போதுமானதாக இல்லை. எனவே, போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கில் நீர்நிலைகளை ஒட்டி அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தி போக்குவரத்துக்கு உகந்த சாலைகளாக அமைப்பதற்கான சாத்திய கூறுகளை ஆய்வு செய்ய விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

**மின்துறை**

**79. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, பேருந்து சாலைகளில் 200 கி.மீ. தூரத்திற்கு, சேவை குழாய் (Service Duct) மூலம் கம்பி வடம் (Cable) எடுத்து செல்லுதல்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகளில் உள்ள தெருவிளக்கு கம்பங்கள் மற்றும் தனியார் மூலம் நிறுவப்பட்ட கம்பங்களின் மூலம் Over Head cable எடுத்து செல்வதை அகற்றிவிட்டு சேவை குழாய் (Service Duct) மூலம் கம்பி வடங்களை (Cable) எடுத்து செல்லும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**80. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் உள்ள தெரு விளக்குகள் நல்ல வெளிச்சத்துடன் ஒளிர புதிய LED விளக்குகள் பொருத்தப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் 3,01,969 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மண்டலம்-1 முதல் 15 வரையில் 10 ஆண்டுகளுக்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டுள்ள மற்றும் வெளிச்சம் குறைவாக உள்ள 78,130 எண்ணிக்கையிலான LED விளக்குகள் ரூ.65 கோடி மதிப்பீட்டில் மாற்றி பொருத்தப்படும்.

**81. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 15 வரையில் உள்ள மின்துறை பணியாளர்கள் மின்சார்ந்த பணிகளை மேற்கொள்வதற்கும் விரைவாக மின் உபகரணங்களை எடுத்து செல்வதற்கும் 100 எண்ணிக்கையில் BOV வாகனங்கள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்தல்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி, மின்துறையால் அமைக்கப்பட்ட தெருவிளக்குகளை பராமரிப்பு செய்யும் பணியானது 24x7 பணியாகும். இம்மின் சார்ந்த பணிகளை மேற்கொள்வதற்கும், சில நேரங்களில் ஏற்படும் அவசர பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கும், அலுவலகங்களிலிருந்து மின்சார உபகரணங்களை எடுத்து செல்வதற்கும், உபகரணங்களை பணியாளர்கள் பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கும் மற்றும் மின்சார்ந்த பணிகளை விரைவாக மேற்கொள்வதற்கும் மண்டலம் 1 முதல்15 வரையுள்ள மின்சார பிரிவிற்கு 100 எண்ணிக்கையிலான BOV வாகனங்கள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

## தகவல் தொழில்நுட்பம்

**82. பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே இயங்கி வரும் நம்ம சென்னை கைப்பேசி செயலி 1.0ஐ மறுவடிவமைப்பு செய்து நம்ம சென்னை கைப்பேசி செயலி 2.0ஆக (Chennai Mobile App) மேம்படுத்தப்படும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி** www.chennaicorporation.gov.in **அதிகாரப்பூர்வ இணையதளம் 2.0ஆக மறுவடிவமைப்பு செய்யப்படும். இதற்காக ரூ.2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி, தற்போது "நம்ம சென்னை" (Namma Chennai) கைப்பேசி செயலி மற்றும் www.chennaicorporation.gov.in என்கிற அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம், சென்னை வாழ் குடிமக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. இத்தளங்கள், மாநகராட்சிக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான முக்கியமான தொடர்பு பாலமாக செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், தகவல் தொழில் நுட்ப துறையின் வேகமான வளர்ச்சி, பொதுமக்களிடம் அதிகரித்து வரும் எதிர்பார்ப்புகள் மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு, தற்போதுள்ள "நம்ம சென்னை" செயலி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தை முழுமையாக மறுவடிவமைத்து, சென்னை வாசிகளின் இணையதள தினசரி வாழ்க்கையை எளிதாக்கும் நோக்கில் நவீன நகர சேவை தளமாக ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

### புவிசார்ந்த தகவல் மையம் (GIS CELL)

**83. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து வழித்தடங்கள் மற்றும் முக்கிய உட்புற சாலைகள் LiDAR ஆய்வு சுமார் 1,000 கி.மீட்டருக்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு:** சாலை வழித்தடங்களின் உயர் தீர்மான தரவுகள் சேகரிக்கவும், டிஜிட்டல் வரைபடங்கள் உருவாக்கவும், போக்குவரத்து திட்டமிடல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் பேருந்து வழித்தடங்கள் மற்றும் முக்கிய உட்புற சாலைகள் சுமார் 1,000 கி.மீட்டருக்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் LiDAR ஆய்வு மேற்கொள்ளப்படும். இத்திட்டம் ஆரம்ப கட்ட முன்னோட்ட ஆய்வாக (Pilot Study) காதர் நவாஸ்கான் சாலையில் (KNK Road) ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

### ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்

**84. வெள்ளக் கண்காணிப்பு தொடர்பான பணிகளை மேற்கொள்ள 100 மழைநீர் வெளியேற்றும் இடங்களில் (Disposal points) கண்காணிப்பு கேமராக்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC) வெள்ள கண்காணிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கும் நோக்கில் கண்காணிப்பு கேமராக்கள் ஏற்கனவே நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது வெள்ள தடுப்பு தொடர்பான திட்டங்களை மேலும்

வலுப்படுத்தவும், கண்காணிப்பு செயல்திறனை மேம்படுத்துவதற்கும் அதன் பரப்பளவை மேலும் விரிவுபடுத்துவதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 100 முக்கியமான மழைநீர் வெளியேற்றும் இடங்களில் (Disposal points) கண்காணிப்பு கேமராக்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**85. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள நீர்நிலைகளை கண்காணிப்பதற்கு செயற்கை நுண்ணறிவு (AI) உதவியுடன் ட்ரோன் ஆய்வு அமைப்பு ரூ.10 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

**அறிவிப்பு:** நீர்மட்டம், நீர்பரப்பு, சட்ட விரோதமாக குப்பை கொட்டுதல், ஆக்கிரமிப்புகள், நில பயன்பாட்டு மாற்றங்கள், மண் அடைப்பு, நீர்தர குறியீடுகளை கண்காணித்தல், ஏரிகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றையும், அவற்றின் உள்ளும் சுற்றியுள்ள பசுமை மற்றும் தாவர வளர்ச்சியையும் அறிவியல் முறையில், தொடர்ச்சியாக மற்றும் தரவு சார்ந்த வகையில் கண்காணிக்கவும் செயற்கை நுண்ணறிவு (AI) உதவியுடன் ட்ரோன் ஆய்வு அமைப்பு ரூ.10 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இந்த அமைப்பு முழுமையாக ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்துடன் (ICCC) ஒருங்கிணைக்கப்படும்.

## தர கட்டுப்பாடு மற்றும் திட்ட மேம்பாட்டு துறை

**86. பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர்புற திறனை வலுப்படுத்தும் முயற்சியாக, தற்போதுள்ள தர கட்டுப்பாட்டு துறையினை, தர கட்டுப்பாடு மற்றும் திட்ட மேம்பாட்டு துறை என மறுசீரமைத்தல்**

**அறிவிப்பு:** தர கட்டுப்பாட்டு மற்றும் திட்ட மேம்பாட்டு துறை என்கிற புதிய துறை, மாநகராட்சியின் மத்திய திட்ட செயலாக்கம் மற்றும் கட்டமைப்பு பிரிவாக செயல்பட்டு, சென்னையின் தொலைநோக்கு திட்டங்களையும் பெருந்திட்டங்களையும் முதலீட்டிற்கு உகந்த, செயல்படுத்த தயாரான உள்கட்டமைப்பு திட்டங்களாக மாற்றும். அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட துறைகள் திட்டங்களை சரியான நேரத்தில் மற்றும் உயர்ந்த தரத்துடன் செயல்படுத்துவதற்கும் இத்துறை வசதியாக இருக்கும். இப்புதிய துறை பெருநகர சென்னையின் தொலைநோக்கு திட்டங்களை (Vision Plans) செயல்படுத்த கூடிய உள்கட்டமைப்பு திட்டங்களாக மாற்றும் மைய அலகாகவும் கீழ்கண்ட நான்கு பிரிவுகளுடன் முக்கிய பணிகளுடனும் செயல்படும்.

**இந்தத் துறை பின்வரும் நான்கு பிரிவுகளின் கீழ் இயங்கும்**

- கட்டிடக்கலை மற்றும் நகர்ப்புற வடிவமைப்பு (Architecture & Urban Design)
- பொது-தனியார் பங்களிப்பு மற்றும் திட்ட கட்டமைப்பு (PPP & Project Structuring)
- நகர்ப்புற பசுமையாக்கல் மற்றும் நிலைத்தன்மை (Urban Greening & Sustainability)
- தரக் கட்டுப்பாடு (Quality Control)

**இந்தத் துறையின் முக்கிய பணிகள்**

- நகரத்திற்கான தொலைநோக்கு திட்டங்களை தயாரித்தல்.
- கொள்கை மற்றும் திட்டமிடல் ஆவணங்களை செயல்படுத்த கூடிய திட்டங்களாக மாற்றுதல்.

- விரிவான திட்ட அறிக்கைகளை (DPR) தயாரிக்க ஆலோசகர்களை நியமித்தல்.
- திட்டங்களின் தொழில்நுட்ப, நிதி மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.
- தேசிய, மாநில மற்றும் வெளிநாட்டு நிதி உதவி மூலம் நிதியை திரட்டுதல்.
- பொது-தனியார் பங்களிப்பு (PPP) மற்றும் திட்ட கட்டமைப்புகளை வடிவமைத்தல்.
- தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கைகளை செயல்படுத்தும் துறைகளிடம் ஒப்படைத்து மேற்பார்வை செய்தல்.
- திட்டங்களுக்கான தரநிலைகள் மற்றும் தொழில்நுட்ப நெறிமுறைகளை உருவாக்குதல்.
- கட்டுமானத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புகள் மற்றும் விவர குறிப்புகள் பின்பற்றப்படுவதை கண்காணித்தல்.

**வருவாய் துறை**

**87. கையடக்க கருவியின் (HHD/POS) மூலம் சொத்து வரி எளிதாக செலுத்தும் வகையில் QR Code வசதியை கையடக்க கருவியில் ஏற்படுத்துதல்.**

**அறிவிப்பு:** கையடக்க கருவி (HHD/POS) மூலம் சொத்துவரி வசூல் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கருவியில் சம்பந்தப்பட்ட சொத்து உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய தொகைக்கு ஏற்ப QR Code ஏற்படுத்தப்படும். இதன் மூலம் வரி வசூல் பணி மேற்கொள்வது மற்றும் சொத்து உரிமையாளர்களுக்கு சொத்துவரி செலுத்துவது மிகவும் எளிதாகும்.

**88. சொத்துவரி செலுத்தும் போது வாட்ஸ் ஆப் வழியாக வரி ரசீதினை குறுந்தகவலாக அனுப்புதல்**

**அறிவிப்பு:** சொத்து உரிமையாளர்கள் சொத்துவரி செலுத்தும் போது வரி ரசீது உடனுக்குடன் சொத்து உரிமையாளருக்கு குறுந்தகவல் மூலமாக பதிவு செய்துள்ள தொலைபேசி எண்ணிற்கு பதிவு செய்துள்ள கைப்பேசி எண்ணிற்கு WhatsApp Message அனுப்பப்படும். அதன் மூலமாக வரி செலுத்துபவர்கள் உடனுக்குடன் வரி ரசீது பெற்றுகொள்வது எளிதாகும்.

**89. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 10 சமுதாய நலக்கூடங்கள் அனைத்து வசதிகளுடன் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 5, 8, 9, 10, 11, 12 மற்றும் 15 ஆகிய மண்டலங்களில் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் 10 எண்ணிக்கையிலான சமுதாய நல கூடங்களை ரூ.20 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் நவீனமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**90. மண்டலம் -15ல் ரூ.7 கோடி மதிப்பீட்டில் புதியதாக வணிக வளாகம் கட்டடத்துறை மூலமாக மேற்கொள்ளுதல்.**

**அறிவிப்பு:** பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -15 வார்டு 199, பழைய மகாபலிபுரம் சாலையில், (மண்டல அலுவலகம் எதிரில்) 50 ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ள சிறிய கடைகளை அகற்றி விட்டு ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டட துறை மூலமாக புதியதாக வணிக வளாகம் கட்டப்படும். **(கைதட்டல் )**

தற்போது வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழு தலைவர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் 2026-2027-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்து உரையாற்றுவார்கள்.

**திருமதி. ந. சர்ப ஜெயாதாஸ், தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்களின் உரை:**

**திருக்குறள் - குறள் 118**

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்ததொருபால்
கோடாமை சான்றோர்க் கணி”.

ஒரு பக்கம் சாய்ந்து விடாமல் நாணயமான தராசு முள் போல இருந்து நியாயம் கூறுவது தான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

வான்புகழ் கொண்ட வள்ளுவன் காட்டிய வழியில், நடுநிலை தவறாமல் நம்மையெல்லாம் வழி நடத்துவது மட்டுமின்றி, எத்தனை தடைகள் எதிர் வந்தாலும், சமநிலை தவறாது, தமிழ்நாட்டின் நலனை காத்திடுவதில், நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காட்டிடும் உறுதியை, நாடே வியந்து பாராட்டி கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், விளையாட்டுகள் நமது இளைஞர்களின் வளர்ச்சிக்கும், சீரான வாழ்க்கை முறையை வளர்த்து கொள்வதற்கும், பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருவது மட்டுமின்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருக்கும், நமது மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு

அவர்களுக்கும், இந்நேரத்தில் எனது நெஞ்சார்ந்த நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, அனைத்து அதிகாரிகளே மற்றும் அலுவலர்களே, ஊடக துறை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்களின் வழியில் சமூக நீதி, மாநில சுயாட்சி, பன்முக கலாச்சாரம், மதச்சார்பின்மை, பகுத்தறிவு, சுயமரியாதை, பெண் உரிமை, சாதி ஒழிப்பு ஆகிய கொள்கைகளை அடித்தளமாக கொண்டு, தமிழ்நாட்டின் கடைக்கோடி மக்களும் பயன்பெறும் வகையில், சமூக, பொருளாதாரம் மற்றும் கல்வி முன்னேற்றத்திற்காக திராவிட மாடல் அரசின் பயன்மிக்க பல்வேறு மகத்தான நல திட்டங்களான, கலைஞர் மகளிர் உரிமை திட்டம், கலைஞர் கனவு இல்லம் திட்டம், பெண்களுக்கான விடியல் பயண திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், மக்களுடன் முதல்வர், உங்களுடன் ஸ்டாலின், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், தோழி மகளிர் தங்கும் விடுதி, இல்லம் தேடி மருத்துவம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், 10 இலட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும், தாயுமானவர் திட்டம், உங்கள் கனவை சொல்லுங்கள், என்கின்ற பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தியும், இத்திட்டங்கள் யாவும் கடைக்கோடி மக்களை சென்றடைய தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டும், ஜனநாயகமுறை ஆட்சியின் பயன் அடித்தட்டு மக்கள் முதல் அனைவருக்கும் சென்றடைவதை உறுதி செய்யவும் ஓய்வறியாமல் உழைத்து வருகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்.

கடந்த நிதியாண்டில் இந்தியா அடைந்த ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 6.5 சதவீதம் தான். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் தளபதி அவர்களின் அயராத உழைப்பினால், தமிழ்நாடு 11.19 சதவீதம் என்கிற உயரிய பொருளாதார வளர்ச்சியை எய்தியுள்ளது. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்பதை மிக மகிழ்ச்சியுடன் பெருமையுடன் தெரிவித்து கொள்கின்றேன்.

அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சிறப்பான திட்டங்களை முன்னெடுத்து, அதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்து, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக மட்டுமின்றி, உலகின் இரண்டாவது தொன்மையான நகராட்சியாகவும், தொன்மையும், புதுமையும் ஒருங்கே அமைய பெற்ற, பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிக்காகவும் அதன் கட்டமைப்பினை மேம்படுத்தவும், கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்ட பணிகளை 'மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும், குறிப்பாக வட சென்னை பகுதியின் வளர்ச்சிக்காக மட்டும் ரூ.6045 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் பல்வேறு பயன்மிக்க திட்டங்களை செயல்படுத்தியும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்தோடும், இலட்சியத்தோடும் இந்தியாவிற்கே வழிகாட்டிடும் முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டில் “திராவிட மாடல்” ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின், ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள், அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலோடு, தயாரிக்கப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின், 2026-2027ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை, மாமன்றத்தில் சமர்ப்பிக்க நல்லதொரு வாய்ப்பினை வழங்கிய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு, மீண்டும் ஒரு முறை நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்து கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் 2.0 ஆட்சி மீண்டும் அமையும் என்று கூறி வரவு செலவு திட்டத்தினை சமர்ப்பிக்கின்றேன். **(கைதட்டல்)**

வரலாற்று சிறப்பு மிக்க பெருநகர சென்னை மாநகராட்சி, வளர்ந்து வரும் மாநகரத்தில் வசிக்கும் மக்களின் அடிப்படை தேவைகளை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளை தொடர்ந்து செயல்படுத்தும் வண்ணம் 2026-2027-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு, செயல் திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிதிநிலை**

2026-2027-ஆம் நிதியாண்டின் வருவாய் கணக்கு தலைப்பில், வருவாய் வரவு ரூ.6040.97 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.6146.29 கோடியாகவும் இருக்கும். மூலதன வரவு ரூ.2517.34 கோடியாகவும், மூலதன செலவு ரூ.2754.05 கோடியாக இருக்கும்.

**வருவாய் கணக்கு**

2025-2026-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ.5145.52 கோடியாக இருந்த வருவாய் கணக்கின் வரவுகள், இதே ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி ரூ.5511.77 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 2026-2027-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு ரூ.6040.97 கோடியாக இருக்கும். 2025-2026-ஆம் நிதியாண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5214.09 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இனங்களின் செலவு, திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.6268.48 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2026-2027-ஆம் நிதியாண்டில் வருவாய் இனங்களின் செலவு ரூ.6146.29 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

**வருவாய் வரவினங்கள்**

**சொத்து வரி:** பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் இனங்களில் முதன்மையான பங்கு வகிப்பது சொத்து வரியாகும். 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.2300.00 கோடியாக நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் இந்த வருவாய் ரூ.2450.00 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தொழில் வரி :** 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.600.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2026-2027-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்திலும் தொழில் வரியின் வருவாய் ரூ.600.00 கோடியாகவே இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்**

**முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி**: பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி வருவாய் 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.400.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு, 2026-2027 ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் மீதான வருவாய் ரூ.450.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**மாநில நிதி குழு மானியம்:** 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி மாநில நிதிக்குழு மானியம் அரசின் வரி தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் வருவாய் ரூ.1200.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டு, 2026-2027-ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் மீதான மானிய வருவாய் ரூ.1350.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**இதர வருவாய்**

2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி, தொழில் உரிம கட்டணம், கட்டிட உரிம கட்டணம், மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள், அங்காடி உரிம கட்டணம், வாகன நிறுத்த கட்டணம், நிறும வரி, கேளிக்கை வரி மற்றும் ஏனைய வருவாய் இனங்களின் மூலமாக ரூ.1011.77 கோடி வருவாய் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. மேலும்,

இந்த வருவாய் 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.1190.97 கோடி அளவிற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**வருவாய் செலவினங்கள்**

**பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்:** மாதாந்திர சம்பளம், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதிய பயன்கள், பிற ஓய்வூதிய பயன்கள், பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு மாநகராட்சியின் பங்களிப்பு தொகை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நேரடியாக நியமிக்கும் தற்காலிக பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் பிற செலவினங்கள் 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி ரூ.2258.22 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவினங்கள் 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.2437.40 கோடியாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**நிர்வாக செலவு:** இச்செலவினத்திற்கென 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.329.73 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.328.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செலவினங்கள்:** பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு, இயக்க செலவுகள், துப்புரவு பணிகளுக்கான செலவினம், திட்ட செலவுகள், எரி பொருள் கொள்முதல் மற்றும் வாகனங்களுக்கு தேவையான உதிரி பாகங்கள் கொள்முதல், வாகனங்களுக்கான காப்பீடு போன்ற பல்வேறு செலவினங்களுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டு திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.2504.07 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.2232.70 கோடி அளவிற்கு செலவினம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**கடனுக்கான வட்டி செலுத்துதல்:** மூலதன பணிகளை மேற்கொள்ளுவதற்காக பெறப்பட்ட கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டிக்காக 2025-2026-ஆம் நிதியாண்டு திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.74.11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் இச்செலவினத்திற்கென ரூ.95.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மூலதன வரவுகள்**

2025-2026-ஆம் நிதியாண்டு நிதிநிலை அறிக்கையின்படி மூலதன வரவு திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.3364.75 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் வரவு ரூ.2517.34 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**மூலதன செலவு**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு துறைகள் மேற்கொண்டு வரும் மூலதன பணிகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.3915.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் செலவினம் ரூ.2754.05 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**துறை வாரியாக 2026-2027 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள மூலதன திட்டங்கள்**

**பேருந்து சாலைகள் :** தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு நிதி (TURIF), சிங்கார சென்னை 2.0 திட்டம், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT), ஆகிய தமிழ்நாடு அரசின் மான்யம் மூலமாக சாலைகளை புதியதாக அமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி மூலம் பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்துதல், நடைபாதைகளை மேம்படுத்துதல்

மற்றும் பல்வேறு விதமான பணிகள் பேருந்து சாலை துறையின் மூலம் மேற்கொள்ள ஏதுவாக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.311.60 கோடியும், 2026-2027-ஆம் நிதியாண்டிற்கு ரூ.725.06 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மழைநீர் வடிகால்வாய்கள் :** கொசஸ்தலையார் பகுதி – ஆசிய வளர்ச்சி வங்கி நிதி (ADB), கோவளம் பகுதி – ஜெர்மன் வங்கி நிதி (KfW), மாநில பேரிடர் தடுப்பு நிதி, மற்றும் பல்வேறு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்காக மழைநீர் வடிகால் துறையின் கீழ் 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.1290.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.693.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திடக்கழிவு மேலாண்மை:** தூய்மை இந்தியா திட்டம் 2.0 மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தினை அகழ்ந்தெடுக்கும் பணி, துப்புரவு பணிக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்தல், குப்பை கொட்டும் கிடங்குகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல் மற்றும் இதர பணிகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.272.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.323.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பாலங்கள்:** உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் மூலதன நிதி ஆகியவற்றின் மூலமாக புதிய பாலங்கள் கட்டுமான பணிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தும் பணிகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.160.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.130.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கட்டிடம் :** பெருநகர சென்னை மாநகராட்சியில், NUHM திட்டம், சிங்கார சென்னை – 2.0 திட்டம், வடசென்னை வளர்ச்சி திட்டம் மற்றும் மூலதன நிதி ஆகியவற்றினை கொண்டு நகர்புற சுகாதார மையங்கள், கழிப்பறைகள், வாகன

இயக்கூர்தி நிலையங்கள் கட்டுதல், பழுதடைந்த பள்ளி கட்டிடங்களுக்கு பதிலாக புதிய பள்ளிகூடங்களை கட்டுதல், பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல், சமூக நலக்கூடங்கள் கட்டுதல், மாட்டு தொழுவம் அமைத்தல், அம்மா உணவகங்கள் மேம்படுத்தும் பணி மற்றும் பிற பணிகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.475.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.400.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில் நுட்பம்:** அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணிப்பொறி, அச்சு கருவிகள், டிஜிட்டல் சர்வர்கள் மற்றும் வலைதள அமைப்பு உபகரணங்கள் ஆகியவற்றினை கொள்முதல் செய்வதற்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.18.47 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.12.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்சாரம் :** பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியினை கொண்டு புதிய தெரு விளக்கு மின்கம்பங்கள் அமைக்கும் பணி, மின்வடங்கள் புதியதாக மாற்றுதல், தகன மேடைகள் மற்றும் பள்ளிகளுக்கு தேவையான மின் ஆக்கிகள் (Generator) கொள்முதல் மற்றும் இதர பணிகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.81.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.41.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்:** புதியதாக வீடியோ திரை அமைத்தல், மாநகரில் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், வட்டார அலுவலகங்களில் கட்டுப்பாட்டு மையங்களை உருவாக்குதல் போன்ற பணிகளுக்காக 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இயந்திர பொறியியல் :** சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான கனரக வாகனங்கள் கொள்முதல், அலுவலர்களுக்கான மகிழுந்துகள் (Car), கடற்கரையை தூய்மைப்படுத்தும் இயந்திரம், மரம் வெட்டும் உபகரணங்கள் போன்றவைகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.69.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கல்வி:** பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான சாய்வு மேஜைகள், ஆய்வக உபகரணங்கள் வாங்குதல், பள்ளிகளுக்கு தேவையான கணிப்பொறி, மின்னணு பலகைகள் கொள்முதல் செய்தல் போன்றவைகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.26.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.11.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம்:** பெருநகர சென்னை மாநகராட்சி பரிசோதனை கூடங்களை நவீனப்படுத்துதல் மற்றும் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள ஏதுவாக கையில் எடுத்து செல்லத்தக்க புகைபரப்பும் இயந்திரம் மற்றும் வாகனத்தில் பொருத்தக்கூடிய புகைபரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்ய 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.4.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.4.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மருத்துவ சேவைகள் துறை :** நவீனப்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக தேவைப்படும் அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்ய 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.1.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.1.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறப்பு திட்டங்கள் :** உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, சிட்டீஸ் திட்டம், சிங்கார சென்னை 2.0 திட்டம், நீலக் கடற்கரை பணிகள், சென்னை மாநகர பங்களிப்பு (உலக வங்கி நிதி) போன்ற பல்வகை நிதி ஆதாரங்களை கொண்டு மூலதன பணிகளை மேற்கொள்ள 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.157.53 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.85.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பூங்கா மற்றும் விளையாட்டு திடல்:** பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலங்களில் பூங்காக்கள், பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் மேம்படுத்துதல், விளையாட்டு திடல்கள் அமைத்தல், உடற்பயிற்சி கூடங்கள் அமைத்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் போன்ற பணிகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.54.36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.28.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மண்டலங்கள்:** தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு நிதி (TURIF), சிங்கார சென்னை 2.0 திட்டம், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) போன்ற தமிழ்நாடு அரசு மான்யத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான பணிகள் மற்றும் இதர மூலதன பணிகளுக்காக மண்டலம் 1 முதல் 15 வரை அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள அனைத்து மண்டலங்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.984.36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.267.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு திட்டம் :** 2026-2027ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.120.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மேயர் சிறப்பு மேம்பாட்டு திட்டம் :** 2026-2027ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதிநிலை அறிக்கையை தயாரிக்க எனக்கு பல ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் அளித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்கள், மண்டலக்குழு தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன். மேலும், இந்த நிதிநிலை அறிக்கையை நல்ல முறையில் வடிவமைத்துக் கொடுத்த ஆணையர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன். நன்றி, வணக்கம். **(கைதட்டல்)**

**மாண்புமிகு மேயர்**

நன்றி. இத்துடன் இன்றைய கூட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது. அடுத்த கூட்டம் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன். நன்றி.

நாட்டுப்பண்.

**(அவையில் நாட்டுப்பண் பாடப்பட்டது)**

கூட்டம் முடிவுற்ற நேரம் : பிற்பகல் 1.03 மணி